
# அறநெறி அமுதம்

ஆன்மீக விழுமியக் காலாண்டிதழ்



## இராமகிருஷ்ண மிஷன் கொழும்பு
## பவள விழா சிறப்பு மலர்



## 1930 ~ 2005

இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை
40, ராமகிருஷ்ண வீதி, கொழும்பு - 06.

அமுதம் 5 துளி 4

# சுவாமிஜியின் திருமுகம்

அன்பு இளைஞர்களே!

சங்கம் என்பதன் பொருள், பணியைப் பலர் பகிர்ந்து கொள்ளல் என்பதே. ஒவ்வொருவரும் தத்தம் வேலையைச் செய்ய வேண்டும். அங்ஙனம் எல்லோருடைய வேலையும் ஒருங்கிணையும் போது, அது ஒரு சிறப்பான பணியாக அமையும். ஒருங்கிணைந்து, ஓர் அமைப்பின் வாயிலாக வேலை செய்கின்ற வலிமைதான், மேலை நாட்டினரின் வெற்றியின் இரகசியம். அதற்கு பரஸ்பர நம்பிக்கை, கூட்டுறவு, உதவும் குணம் வேண்டும்.

நான் ஓர் ஏழை. ஏழைகளை நேசிக்கிறேன். வறுமையிலும் அறியாமையிலும் நிரந்தரமாக அழுந்திக்கிடக்கின்ற மக்களைப் பற்றி யார் அக்கறைப்படுகின்றனர்! அவர்களுக்கு ஒளி தருவது யார்? வீடுவீடாகச் சென்று அவர்களுக்குக் கல்வி கொடுப்பது யார்? இந்த மக்களே உங்கள் தெய்வங்கள் ஆகட்டும். யாருடைய இதயம் ஏழைகளுக்காக இரத்தம் சிந்துகிறதோ, அவனையே மகாத்மா என்பேன். கிராமம் கிராமமாக, வீடுவீடாகச் சென்று இந்தக் கருத்துக்களைப் பரப்புங்கள். அதுதான் சரியான வேலை.


தம்பிடிக் காசு கையில் இல்லாத ஐந்தாறு சிறுவர்கள் தொடங்கிய ஓர் இயக்கம், இப்போது வேக கதியில் முன்னேறி வருகின்றதே, இது வெறும் ஏமாற்று வித்தையா அல்லது ஆண்டவனின் திருவுளமா? ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் உலகின் நன்மைக்காக வந்தார். அவரை மனிதன் என்றோ, கடவுள் என்றோ, அவதாரபுருஷர் என்றோ, எப்படி வேண்டுமானாலும் சொல்லுங்கள். உங்கள் அறிவுக்கு எட்டியபடி அவரை ஏற்றுக் கொள்ளலாம். அவரை வணங்குபவர்கள் அந்தக்கணமே தங்கமாக மாறிவிடுவார்கள். இந்தச் செய்தியுடன் வீடுவீடாகச் செல்லுங்கள் பார்க்கலாம், அமைதியின்மை எல்லாம் போய்விடும். பயத்தை விட்டுவிடுங்கள். பயத்திற்கு இடமெங்கே? இதுவரை அவரது திருநாமத்தைப் பரவச் செய்துள்ளீர்கள். உங்கள் பெருமை பல இடங்களிலும் பரவியுள்ளது. மிகவும் நல்லது. இப்போது அவற்றை ஓர் அமைப்பின் மூலம் செய்யுங்கள். இறைவன் உங்களுடன் இருக்கின்றார், தைரியமாக இருங்கள்.

ஓர் அமைப்பு வேண்டும். சோம்பல் ஒழியட்டும். பரவுங்கள், பரவுங்கள், தீப்போல் எங்கும் பரவுங்கள். என்னை எதிர்பார்த்து இருக்காதீர்கள். நான் இருந்தாலும், இறந்தாலும் எங்கும் பரவிச் செயற்படுங்கள். எல்லையற்ற அன்பைப் பரப்புங்கள். எங்கும் நிறைந்த கடவுளின் இந்த வழிபாட்டை(ஜீவ சேவையை) பிரசாரம் செய்யுங்கள். சங்கத்தைப் பலப்படுத்தி வளரச் செய்யுங்கள்.



ஆசிகளுடன் Vivekananda

# பிரார்த்தனை



குருர்ப்ரஹ்மா குருர்விஷ்ணு: குருர்தேவோ மஹேஸ்வர:
குரு:சாக்ஷாத் பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீகுரவே நம:

ஓம் ஸ்தாபகாய ச தர்மஸ்ய ஸர்வ தர்ம ஸ்வரூபிணே
அவதார வரிஷ்டாய ராமகிருஷ்ணாய தே நம:

ஜனனீம் ஸாரதாம் தேவீம் ராமக்ருஷ்ணம் ஜகத்குரும்
பாதபத்மே தயோ: ச்ரித்வா ப்ரணமாமி முஹுர் முஹு:

நம: ஸ்ரீயதிராஜாய விவேகானந்த ஸூரயே
ஸத் சித் சுக ஸ்வரூபாய ஸ்வாமினே தாபஹாரிணே

அடியார் பரவும் அமரர் பிரானை
முடியால் வணங்கி முதல்வனை முன்னிப்
படியார் அருளும் பரம்பரன் எந்தை
விடியா விளக்கென்று மேவிநின் றேனே.

– திருமந்திரம்

*பொருள்* - அடியவர்களால் துதிக்கப்படுகின்றவனும், தேவர்கட்குத் தலைவனும், இவ்வுலகத்திற்கு எல்லா அருளையும் புரிபவனும், மேலானவற்றுக்கெல்லாம் மேலானவனும், எமக்குத் தந்தையாய் நிற்பவனும் ஆகிய சிவபெருமானை நான் அணையா விளக்காகக் கொண்டு தலையால் வணங்கி, மனத்தால் நினைத்து அன்பு செய்து நிற்கின்றேன்.

ராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.
40, ராமகிருஷ்ண வீதி, கொழும்பு - 06.

அமுதம் 5 துளி 4

# இந்த இதழில்...


| பக்கம் | தலைப்பு |
|---|---|
| 1. | பிரார்த்தனை |
| 3. | இதழாசிரியர்களிடமிருந்து |
| 4. | ஸ்ரீஇராமகிருஷ்ண மடங்கள் - மானுடத்தின் சரணாலயங்கள் |
| 7. | கவிதை - "இடாறு மடம்" |
| 8. | சிறுவர் பகுதி - "புதையல் எங்கே?" |
| 10. | நெஞ்சை நெகிழ வைக்கும் உண்மை |
| 12. | குழந்தைகள் - மனித குலத்தின் மாபெரும் செல்வங்கள் *'குழந்தைகள் - மனித குலத்தின் மாபெரும் செல்வங்கள்' எனும் நூலிலிருந்து தொகுக்கப்பட்டது)* |
| 20. | செய்திகள் |
| 21. | கொழும்பு ராமகிருஷ்ண மிஷன் - அன்றும், இன்றும் |
| 29. | பஞ்ச தந்திரக் கதை - "தீயது நினைப்பின், தீமையே நடக்கும்!" |
| 30. | படக்கதை - "பக்தியின் மேன்மை" |
| 34. | இராமகிருஷ்ண குடும்பம் - "ஹிருதயராம் முகோபாத்தியாயர்" |
| 36. | என் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்திய மகான் . . . |
| 38. | அவதாரவரிஷ்டர் - ஸ்ரீராமகிருஷ்ணர் |
| 40. | அன்பார்ந்த பெற்றோர்களே! |
| 45. | 'அறநெறி அமுதம்' - மதிப்புரைகள் கடந்த மலர்களை மலரச்செய்தோரிடமிருந்து.... |
| 48. | குறுக்கெழுத்துப் போட்டி |


---

எல்லா மனங்களும் ஒரே தன்மையுடையவை; தன் மனத்தை அடக்க முடிந்தவனால் எல்லா மனங்களையும் கட்டாயம் அடக்கமுடியும். இதனாலேயே தூய்மையும் ஒழுக்கமும் எப்போதும் சமயத்தின் நோக்கமாக வைக்கப்பட்டுள்ளன. தூய்மையும் ஒழுக்கமும் வாய்ந்தவன் தன்னை அடக்கி ஆள்கிறான்

- *சுவாமி விவேகானந்தர்*

# இதழாசிரியர்களிடமிருந்து

உலகியலில் சிக்கித் தவிக்கும் மனித மனங்களுக்கு நிழலையும், ஆன்மீகப் பேரொளியைத் திக்கெட்டிலும் பரவச்செய்து கொண்டிருக்கின்றன உலகெங்கிலும் பரந்துள்ள ராமகிருஷ்ண மடங்களும் மிஷன்களும்.

இவை பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் கருணையாலும், அன்னை ஸ்ரீசாரதாதேவியின் பிரார்த்தனையாலும், சுவாமி விவேகானந்தரின் முயற்சியாலும் மனிதகுலத்தின் மேன்மைக்காக உருவாக்கப்பட்டவை. சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவுகளிலும், ஏன் அவரது வாழ்க்கை முழுவதுமே படர்ந்து நிற்கின்ற கருத்து 'மனிதன்'. மதம் என்ற ஒன்று இருந்தால் அது மனிதனுக்கு உதவவேண்டும். ஆன்மீகம் என்ற ஒன்று இருந்தால் அது மனிதனுக்கு உதவவேண்டும். அரசியல் என்ற ஒன்று இருந்தால் அது மனிதனுக்கு உதவவேண்டும். மனிதனை, அவன் இருக்கின்ற இருக்கின்ற இடத்திலிருந்து முன்னேற உதவாத எதையும் அவர் ஏற்றுக்கொள்ள வில்லை. எனவே ராமகிருஷ்ண மடங்களும் மிஷன்களும் தனிமனித ஆன்மீக மறுமலர்ச்சியையும் உலக மக்கள் சேவையையும் தாரக மந்திரமாகக் கொண்டு சேவையாற்றி வருகின்றன. அந்தவகையில் கொழும்பில் இயங்கி வரும் ராமகிருஷ்ண மிஷன் இவ்வாண்டில் பவளவிழா காணுகின்றது. அதனை சிறப்பிக்கும் முகமாக அறநெறி அமுதத்தின் இத்துளி சிறப்பு இதழாக வெளியாகின்றது. இம் மலரை, வழமையான ஆக்கங்களுடன் சேர்ந்து சிறப்பு ஆக்கங்களும் அலங்கரிக்கின்றன.

இவ்விதழில், மானுடத்தின் சரணாலயங்களாகத் திகழ்கின்ற ராமகிருஷ்ண மடங்கள் பற்றிய சிறப்புக் கட்டுரையும் கவிதையும் உள்ளன. தனிமனித வாழ்க்கையில் செல்வாக்கு செலுத்துபவையான-பெற்றோரின் பங்களிப்பு, சமயத்தின் பங்களிப்பு, நன்நெறிகளை கடைப்பிடித்தல் போன்றவற்றை ஆராயும் வகையில் 'குழந்தைகள் - மனிதகுலத்தின் மாபெரும் செல்வங்கள்', அன்பார்ந்த பெற்றோர்களே!' என்னும் ஆக்கங்கள் அமைகின்றன. இறைவன் மனிதகுலத்தின் மேன்மைக்காக அவதரிக்கின்றான். மனிதபரிணாம வளர்ச்சி போன்றே இறைவனின் அவதாரமும் காலத்திற்கேற்ப அமைகிறது என்னும் கருப்பொருள் தாங்கி வருகிறது 'அவதாரவரிஷ்டர் - ஸ்ரீராமகிருஷ்ணர்'. அத்துடன் உண்மையான பிரார்த்தனைக்கு கடவுள் செவிசாய்ப்பார் என்பதை நிதர்சனமாக்குகின்றது சித்திரக்கதையாக அமைந்துள்ள உண்மைச் சம்பவம்.

இம் மலரை பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பாதக்கமலங்களில் சமர்ப்பிக்கின்றோம்

"இந்த உலகம் எவ்வளவோ இன்பமானது, உலகெங்கும் இன்பமும் இனிமையும் நிறைந்து கிடக்கிறது, நாம் வெளியில் சென்று அள்ளிக்கொள்ள வேண்டியது தான் - என்றெல்லாம் குழந்தைப் பருவத்தில் நாம் நினைத்தது உண்டு. ஒவ்வொரு குழந்தையின் கனவும் அது தான். ஆனால் அவன் வெளியே வரும் போது, வெளியில் வந்து அன்றாட உலகை எதிர்கொள்ளும் போது கனவுகள் கலைந்துவிடுகின்றன" என்று குறிப்பிடுகின்றார் சுவாமி விவேகானந்தர். (ஞானதீபம்-3, ப-8)

# ஸ்ரீஇராமகிருஷ்ண மடங்கள் - மானுடத்தின் சரணாலயங்கள்

ஆம் ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் இது நடைபெறுகிறது. ஏமாற்றங்கள், அவநம்பிக்கைகள், ஏக்கங்கள், தோல்விகள் எனப் பலவிதமான எதிர்மறை உணர்வுச் சுழல்களில் சிக்கி இதயம் விம்முகிறது. இவ்வாறு பவசாகரத்தின் துன்பப் பேரலைகளின் கோரப்பிடியில் சிக்கிச் செய்வதறியாது தவிக்கும் மனிதனுக்கு அவனது உறவுகள் யாராலுமோ, உலகப் பொருட்கள் எதனாலுமோ அமைதியளிக்க முடிவதில்லை. உலகத் தாபங்களின் கிஞ்சித்த இரக்கமற்ற கொடூரத்தனமான தாக்கத்தினால், இதயத்தை வாட்டும் ரணங்களுடன் அமைதி தேடியும், ஆறுதல் வேண்டியும் ஏக்கத்துடன் கால் வலிக்க அங்குமிங்குமாக ஓடுகிறான் மனிதன். ஆனால்; அந்தோ பரிதாபம்! எங்குமே அவன் தேடும் அமைதி கிடைப்பதில்லை. இதனால் மேலும் மேலும் வருத்தமடைந்து, கவலைகளை மறக்கும் பொருட்டு தீய பழக்கங்களுக்கு அடிமையாகவும் அவன் தயங்குதில்லை. இது இன்றைய உலகில் காணப்படும் மிக முக்கியமான பிரச்சினைகளுள் ஒன்றாகும்.


அவ்வாறு துன்பத்தில் துவண்டு விட்ட ஒவ்வொரு இதயத்தையும் இதமாக வருடி விடுவதற்கும், அமைதி தந்து அன்புடன் அரவணைப்பதற்கும், சரணாலயங்களாக உலகெங்கும் விளங்குபவையே ஸ்ரீ இராமகிருஷ்ண மடங்கள். பறவைகளுக்கும், விலங்குகளுக்கும்,



சரணாலயங்களை அமைத்தான் மனிதன். ஆனால் அந்த மனித குலத்திற்கே சரணாலயங்களை, இராமகிருஷ்ண மடங்களை அமைத்தவர் தான் சுவாமி விவேகானந்தர். இவை துன்பத்தில் துவளும் இதயங்களுக்கான இளைப்பாறும் பூங்காக்கள், அல்லலால் அவதிப்படும் மனங்களை ஆறுதலால் அரவணைக்கும் ஆலயங்கள். அலைமோதும் மனங்களிலும் அமைதியை நிரப்பும் ஆனந்தச் சுரங்கங்கள்.


## சங்க ஜனனி ஸ்ரீ சாரதா தேவியின் பிரார்த்தனை

ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கம் உருவாவதற்காக அன்னை சாரதை செய்த பிரார்த்தனையில் மேற்கண்ட நோக்கம் தொனிப்பதை அன்னையின் வாய்மொழியாலே பார்ப்போம். 'நான் குருதேவரிடம், "*பகவானே! நீ மனித வடிவில் வந்தாய். சில காலம் மகிழ்வுடன் கழித்துவிட்டு மறைந்து விட்டாய். அத்துடன் அனைத்தும் முடிந்து விட்டதா? அதுதான் முடிவு என்றால் இந்த உடல் எடுத்து ஏன் அவ்வளவு வேதனைகளை ஏற்றுக் கொண்டாய்? உனக்காக அனைத்தையும் துறந்த என் குழந்தைகள் அனைவரும் உன்னையும் உன் உபதேசங்களையும் மையமாகக் கொண்டு ஓரிடத்தில் ஒன்று கூடி வசிக்க வேண்டும். உலக வாழ்வில் துன்புற்ற மக்கள், அவர்களிடம் உன் உபதேசங்களைக் கேட்டு ஆறுதல் பெற வேண்டும்.*" என்று பிரார்த்தித்தேன்.' - (ஸ்ரீ சாரதாதேவி வாழ்க்கையும் உபதேசங்களும், ப-62, 63)



வாழ்வில் எண்ணிறந்த அடிகளைப் பெற்றுத் துன்பப்பட்டு மனமுடைந்த நிலையில் இங்கு மடத்திற்கு வரும் ஒவ்வொருவருடைய மனத்திலும் பவரோக வைத்தியரான பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சாந்நித்தியம் அமைதியை நிரப்புகிறது.

"மகளே! யாரெல்லாம் வந்திருக்கிறார்களோ, யாரெல்லாம் வரவில்லையோ, இனி யாரெல்லாம் வரப்போகிறார்களோ அந்த என் பிள்ளைகளுக்கெல்லாம் என் அன்பைத் தெரிவித்துவிடு. எனது நல்லாசிகள் அவர்களுக்கு எப்பொழுதும் உண்டு." என்று அன்பு மொழி பகர்ந்தவாறே இனிவரப்போகும் தனது குழந்தைகளையும் அன்புடன் அரவணைக்க, தனது மடியில் ஏற்றுக்கொள்ள ஏங்குவது போலவே கருணை பொங்கும் பார்வையுடன் அமர்ந்திருக்கிறார் அன்னை சாரதை. "யார்தான் இல்லாவிட்டாலும் உனக்கு ஒரு அம்மா இருக்கிறார் என்பதை நினைவில் கொள்" என்றும் "உன் தாயாகிய




என்னை நினைவில் கொள்ளும் போது நீ எதற்காகப் பயப்பட வேண்டும்?" என்றும் கூறி நம்பிக்கையூட்டியவாறும், "எனது குழந்தைகளை விதியால் கூட எதுவும் செய்து விடமுடியாது" என்று அபயமளித்தவாறும் நம்மைக் காத்து வருகிறார் அவர். தனது குழந்தைகளின் துயர் கண்டு கன்றைப் பிரிந்த பசுவின் மனம் போலக் கசிந்துருகும் உளம் படைத்த அவரது சாந்நித்தியம் எப்பொழுதும் நமக்கு ஆறுதல் அளிக்கக்கூடியது. எப்பொழுதெல்லாம் நாம் வாழ்வில் நம்பிக்கை இழக்கின்றோமோ அப்பொழுதெல்லாம் நமக்கு நம்பிக்கை தந்து வழி நடத்த, தனது உயிர் ஊட்டும் உரைகளினூடாக இன்றும் உருவமற்ற குரலாக வாழ்ந்து வருகிறார் சுவாமிஜி.

தனது உயிர் ஊட்டும் உரைகளினூடாக இன்றும் உருவமற்ற குரலாக வாழ்ந்து வருகிறார் சுவாமிஜி



"மற்றவர்களின் நன்மைக்காக ஆயிரம் முறை பிறவி எடுக்கவும், பாழும் நரகத்தில் உழன்றிடவுங்கூடத் தயாராக இருக்கிறேன்." என்று எழுதிய மாபெரும் தியாகி அல்லவா அவர்! அப்படிப்பட்ட உத்தமர் நமக்கெல்லாம் அமைதியளிப்பார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லையே! இவற்றிற்கெல்லாம் மேலாக உலகின் நன்மைக்காக வாழ்வைத் துறந்த இராமகிருஷ்ண துறவிகள் தாயின் அன்போடும் நண்பனின் நெருக்கத்தோடும் பேசித் துன்புற்ற இதயங்களுக்கு அமைதி தருகின்றனர்.

ஆம்! உண்மையில் ஸ்ரீ இராமகிருஷ்ண மடங்கள் மண்ணுலக மாந்தர்களின் துயர் துடைப்பதற்காக இறைவனாலேயே உருவாக்கப்பட்ட மானுடசரணாலயங்கள் தான். ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்துக்கான விதிகளை வகுத்த சுவாமி விவேகானந்தர் பிராமணன் முதல் சண்டாளன் வரை அனைவருக்குமே ராமகிருஷ்ண சாம்ராஜ்யத்தில் இடமுண்டு என எழுதுகிறார். ஸ்ரீஇராமகிருஷ்ணரின் திருமுன்பு உயர் நிலைத் துறவிகள் முதல் சமுதாயத்தினால் வெறுத்தொதுக்கப்பட்டவர்கள் வரை அனைவருக்கும் இடமுண்டு. அனைவரும் அவரது அன்பிற்கினிய குழந்தைகளே. ஆம், நண்பர்களே! வாரீர்! ஸ்ரீ இராமகிருஷ்ணரின் திருசன்னதிக்கு வந்து அவரது அமுதமொழிகளைக் கேட்டு உய்வீர்!.



# இடரறு மடம்



கலியுக முடிவின் கடவுளாய் வந்து
நலிவுறு அறநிலை நாட்டிய முனிவர்
ஒலிபெறு போதனை உலகினை
                    - அடையப்
பொலிவுறு மடமிது மலர்ந்தது அறிக.

கதிரவன் கிழமையில் அறநெறி கூறிக்
குதித்திடு சிறுவரின் குழப்படி போக்கி
மதிகொடு பள்ளியுமாண்புற நடத்தி
வதிகிற மடமிது வழுவற அறிக.

துறவற வாழ்வும் இல்லற வாழ்வும்
திறமுறச் செல்லும் திசையினைக் காட்டும்
சிறந்த சமயம் சிறப்பொடு வளரப்
பிறந்த மடமிது பிழையற அறிக

கடலலை விடத்தைக் கக்கிய போதும்
சுடலையில் கனவுகள் எரிகிற போதும்
மிடறுகள் உணவின்றி வரள்கிற போதும்
இடரறு மடமிது இடரற அறிக.

# புதையல் எங்கே?

## சிறுவர் பகுதி


ஒரு பெரிய சந்தை. அங்கே பல பேர் வந்து போவார்கள். அங்கு பிச்சைக்காரன் ஒருவன் பிச்சையெடுத்தபடி நின்றுகொண்டிருந்தான். நீண்ட காலமாக அவன் அந்த ஒரே இடத்தில் நின்று பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான். என்றாலும் அவன் வாயைத்திறந்து, "எனக்கு பிச்சை போடுங்கள்" என்று யாரையும் கேட்பதில்லை. அவன் தினமும் காலையில் அங்கே வந்து, அந்த இடத்தில் நிற்பான். வலதுகையை மட்டும் முன்னால் நீட்டி ஏந்திக் கொண்டிருப்பான். அவன் வாயைத்திறந்து எதுவும் பேசுவதில்லை.

அந்த வழியாக வருகிறவர்களும் போகிறவர்களும் தாங்களாக அவன் கையில் ஏதாவது காசு போட்டுவிட்டு போய்க்கொண்டிருப்பார்கள். அந்த ஒரே இடத்தில் நின்று ஐம்பது வருடமாக அவன் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று ஒரு நாள் அவன் அந்த இடத்திலேயே விழுந்து இறந்து போனான். ஊர் மக்கள் பார்த்தார்கள்! "ஐயோ பாவம்! இப்படி அநாதையாக விழுந்து இறந்து போய்விட்டானே!" என்று பரிதாபப்பட்டார்கள். அந்த ஊர் மக்களுக்கு அவன் மீது மிகவும் அனுதாபம்! இவன் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தால் கூட ஒரு வித்தியாசமான ஆள். யாரையும் தொந்தரவு செய்ததில்லை. ஊர் மக்கள் அனைவரும் ஒன்று கூடி "இந்தப் பிச்சைக்காரனுக்கு இதே இடத்தில் ஒரு சிலை வைக்க வேண்டும்!" என்று ஒரு தீர்மானம் போட்டார்கள். உடனே நிதி வசூலிக்க ஆரம்பித்தார்கள். பல பேர் முன் வந்து தாராளமாக நிதி கொடுத்தார்கள். அப்படி நிறையப் பணம் சேர்ந்து விட்டது. அந்த ஆள் நின்றுகொண்டிருந்த இடத்திலேயே அத்திவாரம் தோண்ட ஆரம்பித்தார்கள்.

ஒரு இரண்டு அடி ஆழம் தான் தோண்டியிருப்பார்கள், திடீரென்று ஒரு வித்தியாசமான சத்தம், "டங், டங்" என்று கேட்டது! அவசர அவசரமாக அந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தார்கள்! ஒரு பெரிய செப்புக்குடம் தெரிந்தது! அதை வெளியே எடுத்து அதில் என்ன இருக்கிறது என்று

பார்த்தார்கள். அந்த செப்புக்குடத்தில் ஏராளமான தங்க நாணயங்கள் இருந்தன. அதைப் பார்த்-ததும் கூட்டத்தில் இருந்தவர்கள் எல்லோரும் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். கூட்டத்தில் ஒருவர், “பார்த்தீர்களா? இந்தப் பிச்சைக்காரன் தன் காலுக்கு அடியிலேயே புதையல் இருக்கிறது என்பது தெரியாததால் போகிறவர்கள், வருகிறவர்களிடமெல்லாம் காசுக்காகக் கையேந்தி நின்றுகொண்டிருந்தே செத்துப்போனான்!” என்று கூறினார். அப்போது அந்த வழியாகத் துறவி ஒருவர் வந்தார். அவர் கூட்டத்தைப் பார்த்துச் சொன்னார்: “ஆமாம்! ஒவ்வொரு மனிதனும் இப்படித்தான் செய்துகொண்டிருக்கிறான்! தன் மனதில் குவிந்திருக்கும் திறமையையும், மகிழ்ச்சியையும், இன்பத்தையும், தெய்வத்தையும் அவன் புரிந்து கொள்வதில்லை. அது வெளியே எங்கேயோ இருப்பதாக நினைத்துக்கொண்டு அதைத் தேடியபடியே மக்கள் காலம் முழுவதையும் கழித்து விடுகிறார்கள்.” இவ்விதம் சொல்லிவிட்டு அந்தத் துறவி அங்கிருந்து சென்றார். கூட்டத்தில் இருந்தவர்கள் அதன் பிறகுதான் சிந்திக்க ஆரம்பித்தார்கள்.





உங்கள் மனத்தில் உள்ள வீணான பயத்தையும் பலவீனத்தையும் நீக்கி விடுங்கள். வழிதவறிச் செய்துவிட்ட பாவங்களையே எண்ணியெண்ணி உங்களைத் தாழ்த்திக்கொள்ள வேண்டாம். மனிதனின் பார்வையில் பெரிதாகப் படுகின்ற பாவம் கூட இறைவனுக்கு ஒன்றுமே கிடையாது. கோடிப் பிறவிகளில் செய்த பாவமாக இருந்தாலும் அவரது பார்வை பட்டதும் காணாமல் போய்விடும்.

- சுவாமி பிரம்மானந்தர்

# லால்பகதூர் சாஸ்திரி

**நெஞ்சை நெகிழ வைக்கும் உண்மை**

நிம்மதி அடைய எளிமையைப் போல் ஒரு அருமருந்து உண்டோ? எளிமையைக் காட்டிலும் சிறந்த செல்வமும் உண்டோ? இந்தக் கேள்விகளுக்கு விடை காணவும், இச்சிறப்பிதழின் நெஞ்சை நெகிழ வைக்கும் உண்மைச் சம்பவக் கட்டுரைப் பகுதியை அலங்கரிக்கவும் லால் பகதூர் சாஸ்திரி என்பவரின் வாழ்வில் நடந்த சில முக்கிய நிகழ்வுகளை இங்கே தருகின்றோம்.



ஜவகர்லால் நேருவின் காலத்திற்குப் பின்னர் இந்திய நாட்டின் தலைமைப் பீடத்தை அலங்கரித்த பண்பாளர் தான் லால்பகதூர் சாஸ்திரி. அவர் 1965 முதல் 1966 வரையான மிகக்குறுகிய காலப்பகுதியில் தான் இந்தியாவின் பிரதம மந்திரி பதவியை வகித்திருந்தாலும் பாரிய தாக்கத்தை இந்திய சமுதாயத்தில் ஏற்படுத்தியவர்.

அக்காலக் கட்டத்தில் நாட்டின் நன்மையைக் கருதி தமது வருமானத்தில் தேவைக்கு அதிகமானவற்றை பொது நலப் பணிகளுக்காக வழங்கும் அரசியல்வாதிகளின் அமைப்பில் அங்கத்தவராக இருந்தார் இவர். தம் குடும்பத்தின் அன்றாட தேவைகளுக்கு மிதமாகக் கிடைக்கும் பணத்தை அவ்வமைப்பிடமே கொடுத்துவிடுவார். இதனால் எந்த ஆடம்பரமோ டாம்பீகமோ இன்றி மிகவும் எளிமையாகவே வாழ்ந்து வந்தது அவரது குடும்பம். பழைய கிழிந்த ஆடைகளிலிருந்த பொத்தான்களையே பராமரித்து தொலைந்த பொத்தான்களுக்கு மாற்றாக பாவித்து வந்தார் அவர்.

ஒருமுறை அரசாங்கத்தின் உயர்ந்த பதவி ஒன்றின் வெற்றிடத்திற்கு அவரது மகனைச் சிபாரிசு செய்யுமாறு

பலர் அவரிடம் கேட்டபோதும் மகனது முயற்சிக்கேற்ற வேலையைத் தேடி பெற்றுக் கொள்ளட்டும் என்று கூறி சிபாரிசு செய்ய மறுத்து விட்டார்.



மறுமுறை ஏதோ ஒரு அவசர வேலை காரணமாக அவருக்கு ஒரு முப்பது ரூபாய் மேலதிகமாக தேவைப்பட்டது. எந்தவித சேமிப்பும் இல்லாத அவரிடம் அப்பணத்தை உடனே பெற முடியவில்லை. அதை அறிந்த அவரது மனைவி தமக்கு கணவனிடமிருந்து வீட்டுச் செலவிற்காக வழங்கப்பட்ட பணத்தில் ஏதோ சிறியதை உண்டியலில் சேகரித்து அதில் கிடைத்த முப்பது ரூபாயை அவருக்குக் கொடுத்தார். அதன் பின்னர் சாஸ்திரி அவர்கள் அடுத்த முறை சம்பளத்தில் அவரது மனைவி சேமித்த தொகை மேலதிகமே எனக் கருதி அதையும் குறைத்தே பெற்றுக் கொள்ளலானார்.


அவர் எந்த அளவிற்கு எளிமையானவராக வாழ்ந்தார் என்றால். அவரது மறைவிற்குப் பிறகு அவரது மனைவி வயலில் கூலி வேலை செய்துதான் தனது பிற்காலத்தை ஓட்டினார் என்றால் சற்று யோசித்து பாருங்களேன்.

---



"கோழையும் முட்டாளுமே விதி என்பான்" என்கிறது ஒரு பழமொழி. ஆற்றல் மிக்கவனோ 'என் விதியை நானே வகுப்பேன்' என்று கூறுவான். வலிமைதான் நமக்கு மிகவும் தேவை. துன்பத்துக்கு ஒரே காரணம் பலவீனம்தான். பலவீனத்தால் அறியாமை ஏற்படுகிறது. வழிபாடே நமக்கு வலிமை தருகிறது.

# குழந்தைகள்
# மனித குலத்தின் மாபெரும் செல்வங்கள்



சுவாமி ரங்கநாதானந்தர்
(உலகளாவிய ராமகிருஷ்ண மிஷன் மற்றும் மடங்களின்
முன்னாள் தலைவர்)



## முன்னுரை

ஒவ்வொரு வருடமும் உலகைச் சுற்றிப் பல நாடுகளுக்கு நான் சென்று வந்துள்ளேன். எல்லா இடங்களிலும் என் மனம் கவர்ந்த விடயங்களில் ஒன்று, குழந்தைகள்! அழகான, எளிமையான, உற்சாகம் மிகுந்த, புத்திசாலியான குழந்தைகள் அனைத்து நாடுகளிலும் நிறைந்துள்ளனர். இந்த மழலைகள்தான் மனித குலத்தின் மாபெரும் செல்வங்களாகும்.

பன்னிரண்டு வயது வரை இக்குழந்தைகள் வானுலகத்தவர்கள்தான்! ஆனால் அந்த வயதிற்குப் பின், விரும்பத்தகாத ஏதோ ஒன்று அவர்களுள் சிலருக்கு நேர்ந்து விடுகின்றது. அதனால் அந்த எளிமையும், புனிதமும் அவர்களிடமிருந்து விடைபெற்று விடுகின்றன. இன்றைய நவீன சமூகத்தின் தீயசக்திகளால் அவர்களின் மனோநிலை விகாரமடைகின்றது. அவர்களுள் சிலர் மிக மோசமாக சிதைந்து போய், இளங்குற்றவாளிகளாகவும், போதைப்பொருளுக்கு அடிமையானவர்களாகவும் ஆவதைக் காணலாம். இந்தப் பிரச்சினை இத்துடன் நிற்காது, வருடத்திற்கு வருடம் விபரீத உருவெடுத்து வருகிறது.

தங்கள் தெய்வீகத் தன்மையைப் பாதுகாத்துக் கொண்டு, பக்குவமடைந்த ஆண்களாக, பெண்களாக அவர்கள் மலர, நாம் எவ்வாறு அவர்களுக்கு உதவப் போகின்றோம்? இதுதான் இன்றைய நவீன உலகம் எதிர்நோக்கியுள்ள பாரிய சவாலாகும்.

## மதத்திற்கு அறிவியல் அணுகுமுறை அவசியம்



சமயத்தின் நன்மைகளை இன்றைய சமுதாயம் பெறத் தவறிவிட்டது. கடந்த காலங்களில் இருந்த அனைத்து கலாச்சாரங்களுக்கும் சக்திக் கருவூலமாகத் திகழ்ந்த சமயத்தில் இன்று மக்களுக்கு ஆர்வம் குறைந்து விட்டது. மதவிரோத விடயங்களும், மூடநம்பிக்கைகளும் மதத்தில் புகுந்து விட்டதால், மதம் செல்லரித்துப் போய், நல்லொழுக்கம் நல்கும் ஆற்றலை இழந்து நிற்கின்றது. அதில் ஒருதலைப்பட்சமான, பகுத்தறிவுக்குப் புறம்பான, குறுகிய வகுப்புவாதக் கோட்பாடுகள் அதிகரித்துபோய், இன்றைய நவீன விஞ்ஞான யுகத்திற்கு அது பொருந்தாமல் போய்விட்டது.

உலகெங்கும் உள்ள இளைய தலைமுறையினருக்கு இவ்வகையான மதம் கசத்துப் போனது இயற்கையே! அதனால் அவர்கள் சமயத்தையே விட்டு விலகிச் சென்று விடுவதால், உண்மையான சமயம் அளிக்கக்கூடிய பயனை இழந்து நிற்கின்றனர்.



அறிவியல் கண்ணோட்டத்துடனும், அதன் அணுகுமுறையுடனும் மதத்தைப் பின்பற்றினால், ஒவ்வொரு மனிதனுக்கும் அது தரும் செய்தி மகத்தானது. இந்தியாவின் புராதன ஆன்மீகமும், அதன் நவீன பிரசாரகர் சுவாமி விவேகானந்தரும் நல்கிய மாபெரும் பங்களிப்பு இதுதான்!

குழந்தைகளிடம் மதத்தைக் குறித்து உரையாடும்போது, அவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அதை எடுத்துக் கூற வேண்டும். அப்போதுதான் அவர்கள் மதத்தைப் புரிந்து கொண்டு, நன்கு வளர்ந்த பின்னர், அது உண்மையென்பதை திடமாக உணர்வார்கள். புராணக் கதைகள் அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தருவதாகவும், சில சமயம் கொஞ்சம் படிப்பினையாகவும் இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு, வலிமை தரக்கூடிய, அகத்தை வளப்படுத்துகின்ற அடிப்படை விடயங்களை அதிகமாகக் கொடுக்க வேண்டும். இது விடயமாக சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்: *“ஒவ்வொரு ஜீவனிலும் தெய்வீகம் குடிகொண்டுள்ளது. இத்தெய்வீகத்தை, தன்னலமற்ற சேவையின் மூலமோ, இறைவழிபாட்டின் மூலமோ, மனதை ஒடுக்குவதன்*

*மூலமோ அல்லது ஆன்ம விசாரத்தின் மூலமோ - இவைகளில் ஒன்று அல்லது அதற்குக் கூடியவை அல்லது அனைத்தின் மூலமாக — வெளிப்படுத்தி, பந்தத்திலிருந்து விடுபட வேண்டும். இதுதான் சமயத்தின் நோக்கம். சமய தத்துவங்களோ, சடங்குகளோ, மறைநூல்களோ, வழிபாட்டுத்தலங்களோ அல்லது மூர்த்தங்களோ முக்கியமல்ல. அவை இரண்டாம் பட்சமானவையே''.*

எல்லா மனிதர்களிலும் தெய்வீகம் பிரசன்னமாகியுள்ள உண்மையையும், அதை ஒருவரது வாழ்க்கையிலும், அனைத்துக் காரியங்களிலும், மனித உறவுகளிலும் வெளிப்படுத்துவதற்கான வழிமுறைகளையும் மேற்கூறிய விவேகானந்தரது கூற்று எடுத்துக் கூறுகிறது.



## மனித வளர்ச்சி: அதன் முப்பரிமாணங்கள்

வளரும் குழந்தைகளையும், இளைஞர்களையும், வளர்ச்சி என்ற சொல் எப்பொழுதும் சுண்டி இழுக்கின்றது. குழந்தை எங்ஙனம் வளருகிறது? அந்த வளர்ச்சி எத்தகையது? அதன் குணாம்சங்கள் எவை?

குழந்தை வளர்ச்சி என்னும் விடயத்தில் சமயத்தின் பங்களிப்பைக் குறித்து ஆராய்வோம். மனிதன் என்பவன் ஆன்மா என்று கூறும் அறிவியல், அத்யாத்மவித்யா அல்லது ப்ரம்மவித்யா என்று எமது சமயத்தில் கூறப்படுகிறது. இந்த அத்யாத்ம வித்யையை, 'மானுட சாத்தியங்களின் அறிவியல்' (Science of human possibilities) என்று மறைந்த நவீன உயிரியல் விஞ்ஞானி சர் ஜூலியன் ஹக்ஸ்லி (Sir Julian Huxley) அழைக்கிறார். "மனித நிலையில், பரிணாமத்தின் சிறப்புப் பண்பானது, உடல் மட்டத்திலிருந்து உயர்நிலையை எய்துவதில்தான் வெளிப்படுகின்றது'' என்று அவர் விவரிக்கிறார். அந்த உயர்நிலைக்கு 'உளவியல் மற்றும் சமுதாய உணர்வின் வளர்ச்சி' (Psycho-social evolution) என்று அவர் பெயரிட்டார். மனித உடலின் பரிணாம வளர்ச்சி, பல்வேறு திறன்கள் கொண்ட அவனது பெருமூளை



அமைப்பில் (versatile cerebral system) நிறைவு பெறுகிறது. அதைக் கருவியாகக் கொண்டு அவன், இயற்கையையே மிஞ்சும் வகையில், எதையும் விரைவாகக் கண்டுபிடிக்க இயலும். எனவே, மனிதப் பரிணாமம் உடல் நிலையிலிருந்து, மனம்-சமுதாயம் சார்ந்த உயர்நிலையை எட்டிவிட்டது என்று ஹக்ஸ்லி கூறினார்.

எமது சமயம் மனித ஆளுமையை உடல், மனம், ஆன்மா என்று மூன்று பரிமாணங்களாக வகுத்துள்ளது. மனித வளர்ச்சியின் முதற்படி நிச்சயமாக பௌதீக உடலைச் சார்ந்ததுதான்.



நம் குழந்தைகள் உடல்ரீதியாக நலமாக, நேர்த்தியாக இருக்க வேண்டும். இதற்காகத்தான் பண்டைய இந்தியா யோகாசனக் கலையை வளர்த்தது. மனித மேம்பாட்டின் அனைத்து அம்சங்களுக்கும் ஆரோக்கியமான உடலே ஆதாரமாகும். மன மலர்ச்சியே வளர்ச்சியின் இரண்டாம் படியாகும். குழந்தையொன்று மனோரீதியாக முன்னேறுகிறது. பிறக்கும்போது அது என்ன நிராதரவான நிலையில் இருக்கிறது! ஆனால் குறுகிய காலத்திலேயே அது தன் மனத்திறன்களைப் பெருக்கிக் கொண்டு, தன்னைச் சூழ்ந்திருக்கும் உலகை நன்கறியவும், உலக விடயங்களை அடக்கியாளவும், பயன்படுத்தவும் முயற்சிக்கின்றது. குழந்தையின் அறிவு வளர வளர, அதன் தன்னம்பிக்கையும், பிறரைச் சாராத தன்மையும், வெளி உலகிற்கு கடிவாளமிடும் திறனும் அதிகரித்துக்கொண்டே இருக்கும். குழந்தை வளர்ச்சியின் இந்த இருவகைப் பரிமாணங்களைப்பற்றியும் நவீன நாகரிகம் அறிந்துள்ளது. இந்த இரண்டு துறைகளிலும், நவீன மனிதனின் முன்னேற்றம் அபரிமிதமானது. ஊட்டச்சத்து (Nutrition) என்பது இன்றைய உன்னத விஞ்ஞானமாகும். உடற்பயிற்சியும் அத்தகையதே. அறிவு வளர்ச்சி எனும் இரண்டாம் கட்டப் பரிமாணத்தைப் பொறுத்தவரையில், அநேகக் கல்வித்துறை வாய்ப்புகள் உள்ளன. உண்மையில் இன்றைய உலகில் அறிவும், தகவல்களும் நிரம்பி வழிகின்றன.

ஆனால் எமது மதம் கூறும் அடுத்த நிலையான ஆன்மீக வளர்ச்சி

வியக்கத்தக்க ஒன்றாகும். இன்று இந்த மகத்தான விடயமாகிய ஆன்மாவைக் குறித்து விஞ்ஞான பூர்வமாகவும், ஆராய்ச்சி முறையிலும் அணுக வேண்டிய நேரம் வந்துள்ளது. அதன் பின்னரே மனித வளர்ச்சி என்பதன் உள்ளர்த்தத்தையும், உயர்மதிப்பையும் நம்மால் உணர முடியும்.

உடல், புத்தி, ஆன்மீகப் பரிமாணங்கள் முழுமையான வளர்ச்சியைப் பெற, ஒவ்வொரு குழந்தையும் ஆன்மீக வளர்ச்சிப் பாதையில் செல்ல வேண்டுமென தற்காலத்து உயிரியல், தத்துவ நூல்கள் கூறுகின்றன. இதுவே முழுமையான, நிறைவான கல்வியாகும்.

ஒவ்வொரு குழந்தைக்கும் இரண்டு விஷயங்களைக் கூற வேண்டும்:

1. "நீ வளர வேண்டும், பரிபூரணனாக வளர வேண்டும். உனக்குள் மறைந்திருக்கும் திறன்களை முழுமையாக மலரச் செய்ய வேண்டும்",
2. "உன் வளர்ச்சிக்கு நீயே பொறுப்பாளி. மற்றவர்கள் உனக்கு உதவிக்கரம் மட்டுமே நீட்ட இயலும்".


குழந்தைகளின் வளர்ச்சிக்கான பொறுப்பை ஆறு வயது முதல் அவர்கள் மீது சிறிது சிறிதாக சுமத்த வேண்டும்.



## தனித்துவம், ஆளுமை - ஓர் ஒப்பீடு

மனித வளர்ச்சி, தனித்துவத்தில் (Individuality) தொடங்கி, ஆளுமையில் (Personality) நிறைவு பெறுகிறது.

குழந்தை பிறந்த உடன், அதன் தனித்துவத்தை பலப்படுத்த நீங்கள் கற்றுக் கொடுக்கிறீர்கள். பிறப்பதற்கு முன்னால் அது தனிநபர் அடையாளமின்றி தாயின் உடலின் ஒரு பகுதியாக இருந்தது. பிறந்தவுடன் அது தனித்தோற்ற அடையாளத்துடனும், தனிமனித நிலையுடனும் திகழ்கின்றது. இரண்டு அல்லது இரண்டரை வயதுக் குழந்தையிடம் ஆணவம் என்னும் தன்முனைப்பு (ego) முளைவிடும்போது, தனித்துவமும் (individuality) அதற்குத் தோன்ற ஆரம்பிக்கின்றது. இந்தத் தனித்துவ உணர்வை, மனிதனைத் தவிர்த்து, இப்பிரபஞ்சத்தின் வேறு எந்த உயிரினத்திலும் காணமுடியாது. இந்த 'நான்' உணர்வு தோன்றும் வரையில், குழந்தையானது தன்னை 'இது' என்றே குறிப்பிடும். 'இதற்கு அது வேண்டும், இது வேண்டும்' என்றே அது சொல்லிக்கொள்ளும். 'நான்' என்பது மலர்ந்தவுடன், 'எனக்கு இது வேண்டும், அது வேண்டும்' என்று



அது சொல்லத் துவங்கும். இந்தத் தனித்துவ நிலை ஏற்பட்டதும் ஒரு குழந்தையிடம், தன்னைவிடப் பெரிய, வலிமைமிக்க மிருகங்களையும் ஆட்டுவிக்கும் புதியதொரு சக்தியும், செயலாற்றலும் பெருகுகின்றன. கல்வியின் மூலம் உலகெங்கும் உள்ள இலட்சக் கணக்கான மக்கள் இந்தத் தனித்துவத்தையும், சுயமதிப்பையும், சுயகௌரவத்தையும் உணர்ந்து வருகின்றனர். கல்வியின் மூலம் 5 வயது வரை குழந்தையின் தனித்தன்மையை நீங்கள் திடமாக்க வேண்டும்.

## குழந்தை எப்போது மனிதனாக மலர்கிறது?



எப்போது அது தன்னுடைய சுதந்திர உணர்வுடன் சிறிதேனும் சமூகப் பொறுப்புணர்வை தன் தோளில் சுமக்க முன்வருமோ, எப்போது மற்றக் குழந்தைகளுடனும் மனிதர்களுடனும் மகிழ்ச்சியாகக் கலந்துரையாடவும், அவர்களை நேசிக்கவும், அவர்களால் நேசிக்கப்படவும் முடிகிறதோ, அப்போதுதான் அது மனிதனாகின்றது. தனித்துவநிலை (Individuality) ஆளுமையாக (Personality) பரிணமிப்பதே ஆன்மீக உயர்வின் அடையாளமாகும். முதலில் மங்கலாகக் காணப்பட்டாலும், 12 வயதிற்குப் பிறகு, தெளிவாகவும், திட்டவட்டமாகவும் அதன் எண்ணமும், உணர்ச்சியும் அந்தத் திசையை நோக்கியே செல்வது, குழந்தைத் தனது தனிநிலையிலிருந்து, மனித நிலைக்கு, அதாவது ஆளுமை நிலைக்கு, உயர்வதை கோடிட்டுக் காட்டுகின்றது. இதையே சர் ஜூலியன் ஹக்ஸ்லி, "உடல் சார்ந்த தனித்துவத்தைத் தாண்டிச் சென்று, சமூகத்தில் இதயபூர்வமாகப் பங்கேற்பவர்களே மனிதர்கள் ஆவார்கள்" என்கிறார்.

இங்ஙனம் மழலையானது மனிதனாக மாறாது தனிநபராகவே இருந்துவிட்டால் என்ன ஆகும்? "அந்நிலையில் அது மேசைப் பந்தைப் போன்று அக்கம் பக்கத்தில் வசிக்கும் குழந்தைகளோடும், சூழ்ந்திருக்கும் உலகத்தோடும் முட்டி மோதி மல்லுக்கட்டிக் கொண்டிருக்கும்" என்கிறார் மறைந்த மாபெரும் ஆங்கிலேய சிந்தனையாளர் பெர்டிராண்ட் ரசல் (Bertrand Russell). இப்படியான குழந்தைகளால் மற்றவர்களுடன் ஒத்துவாழ இயலாது. ஆனால் அத்தகைய நிலை அதற்கு உருவாகக்கூடாது. பிறரை நேசிக்கவும், பிறருடன் மனநிறைவான உறவொன்றை உருவாக்கவும், பிறருடன் சுமுகமாக வாழவும் அது கற்றுக்கொள்ள வேண்டும்.



தனிமனித நிலையிலிருந்து ஆளுமை நிலைக்கு பயணித்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.


எனவே அனைத்துக் குழந்தைகளும் தனித்துவ நிலையிலிருந்து ஆளுமை நிலைக்கு உயர, அவர்களை ஆன்மீக மலர்ச்சிப் பாதையில் வழி நடத்த வேண்டும் என மனித குலத்தின் ஆன்மீக, அறிவியல் செறிந்த அனுபவம் கூறுகிறது.



## மனது – சமுதாயம் சார்ந்த பரிணாமமே ஆன்மீகமாகும்

இருபதாம் நூற்றாண்டு உயிரியலின் உயர்ந்த கண்ணோட்டமான மனிதனின் மனது -சமுதாயம் சார்ந்த பரிணாமம், ஆன்ம மலர்ச்சி எனும் சமயத்தின் எதிரொலிதான். இதையே 'மனிதனுள் ஏற்கனவே மறைந்திருக்கும் தெய்வீகத்தின் வெளிப்பாடு' என்கிறார் சுவாமி விவேகானந்தர். இந்தச் சின்னஞ்சிறு உடலியல் இயக்கத்திலிருந்து நமது ஆன்மாவை விடுவித்து, அதனை அன்பாலும், அரவணைப்பாலும் மற்ற ஆன்மாக்களுக்காக விரிவடையச் செய்கின்றமையே ஆன்மீக முன்னேற்றமாகும். அதுதான் மனித பரிணாமத்தின் முடிவும் ஆகும். இந்த ஆன்மீக முன்னேற்றத்தின் வாயிலாகத்தான் அன்பு, கருணை, சாந்தம், நல்லொழுக்கம் போன்ற குணநலன்கள் வெளிப்பட முடியும். இன்று உலகெங்கும் உள்ள கண்கவரும் குழந்தைகளை அந்த ஆன்மீக மலர்ச்சியின் நீண்ட, வசீகரமான பாதையில் கொண்டு சேர்ப்பதால், இனிமை, உண்மை, நன்மை ஆகியவற்றை அவர்கள் மேன்மேலும் வெளிக் கொணர்வார்கள். அதே சமயத்தில் உடல், அறிவு வளர்ச்சியும் அவர்களை வந்தடையும். இருபதாம் நூற்றாண்டு உயிரியல் கேட்பது போல, உலகின் மாபெரும் மதங்கள் எப்போதும் வலியுறுத்துவது போல, பொருட்களை வாங்கிக் குவிக்கும் நுகர்வோர் கலாச்சாரத்திற்கு அதிகம் முக்கியத்துவம் கொடுப்பதை குறைத்துக் கொண்டு, பண்பு வளர்ச்சிக்கு முன்னுரிமை தர வேண்டும்.

## விழுமியங்களின் வீழ்ச்சி



இன்று நுகர்வோர் கலாச்சாரத்தின் கொடுங்கோலாட்சி நடைபெறுகிறது. மனித வாழ்க்கைக்கும், அதன் வளர்ச்சிக்கும், ஆன்மீகக் கலாச்சாரமே உயிர்நாடியாக இருக்கவேண்டும். மனிதன் மற்றும் சமுதாயத்தின் ஆன்மீகத் தரத்தை உயர்த்துவதே கல்வியின் நோக்கமாக இருக்கவேண்டும். அதனால் நிம்மதியும், நிறைவும் எங்கும் பூத்துக் குலுங்கும். இந்த நவீன யுகத்தில் மனிதப் பரிணாமவளர்ச்சி இந்த இலக்கை எட்டிப் பிடித்தே ஆகவேண்டும்.

நமது வாழ்க்கைக்கு நிலையான அடித்தளம் அமைத்துக் கொடுத்து, உயர்ந்த பரிணாமவளர்ச்சி நிலைகளை நோக்கி உயர உதவுவதே அறிவியல், தொழில்நுட்பம், சமூக - அரசியல் செயற்பாடுகளின் நோக்கம். ஆனால் அடித்தளத்திலேயே நாம் சிக்கி விடக்கூடாது.



வாழ்க்கையானது அடித்தளத்திலிருந்து புறப்பட்டு உயர்நிலைகளைச் சென்று அடைய வேண்டும். அதன் மூலம் ஒவ்வொரு குழந்தையினுள்ளும் புதைந்திருக்கும் கலையுணர்வு, ஆன்மீக, ஒழுக்க விழுமியங்கள், மனிதகுல விழிப்புணர்வு, மனிதநேயம் என்பவை மலரும். விழுமியங்களுக்கும் அவற்றின் மூல ஊற்றுக்கும் இன்று பல பிரச்சினைகள் தலையெடுத்துள்ளன. புற இயற்கையிலிருந்தும், தொழில் நுட்பத்திலிருந்தும் விழுமியங்கள் பிறப்பதில்லை. மனித ஆன்மாவில்தான் அவற்றைத் தேட வேண்டும். ஆன்மாவின் ஆழங்களைத் தூண்டி அவற்றுள் பொதிந்திருக்கும் அன்பு, அமைதி போன்ற விலைமதிப்பற்ற விழுமியங்களை வெளிக் கொணர்தலே மனித முன்னேற்றத்தின் மகத்தான கருத்தாகும்.


இந்த உன்னத முழுமனித வளர்ச்சியை அடைய நாம் நமது இளம் தளிர்களுக்கு வழிகாட்ட வேண்டும். நமது குழந்தைகளிடம் நாம் கேட்க வேண்டியது: "நீ வளர்கிறாயா?" அவன் கூறுவான்: "ஆம்". "நீ அறிவாளியாக வளர்கிறாயா?" "ஆம், புத்தகங்களைப் படித்து அறிவைப் பெருக்கிக் கொள்கிறேன்".

அடுத்து வரும் கேள்விதான் மிக முக்கிமானது.

"நீ ஆன்மிக மலர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறாயா? நீ மற்றவரை நேசிக்கிறாயா? உன்னுள் அமைதியை உணர்ந்து, அதை உன்னைச் சுற்றிலும் சுடர்விடச் செய்கிறாயா?"

அதுதான் ஆன்மீக வளர்ச்சியாகும்.

மனித குலத்தின் பண்டைய ஆன்மீகமும், நவீன விஞ்ஞானமும் ஒருங்கிணைந்து, மழலைச் செல்வங்களின் சிறப்பிற்கு வழங்கும் ஞானக் களஞ்சியத்தின் மிக அழகான சிந்தனைத் துளிகளே இவை.



ஆகஸ்ட் மாதம் 26ம் திகதி ஸ்ரீகிருஷ்ணஜெயந்தி ஆச்சிரமத்தில் கொண்டாடப்பட்டது. காலையில் பகவத்கீதை பாராயணமும், மாலையில் பஜனை, பூஜை என்பனவும் மிகச்சிறப்பாக இடம்பெற்றன.

செப்டெம்பர் மாதம் 4ம் திகதி எமது சமய பாடசாலையின் ஆண்டு விழாவும் ஸ்ரீகிருஷ்ணஜெயந்தி விழாவும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு சென்னை சாரதாமடத்தைச் சேர்ந்த ப்ரவ்ராஜிக சுசந்தப்ப்ராணா மாதாஜி, ப்ரவ்ராஜிக ஆத்மதேவப்ப்ராணா மாதாஜி அவர்கள் வருகை தந்திருந்தனர். அன்றைய தினம் பிரதம விருந்தினராக ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவைப் பணிப்பாளரான எஸ்.விஸ்வநாதன் அவர்கள் வருகை தந்தார். அவர் எமது சமய பாடசாலையின் கையெழுத்துச் சஞ்சிகையான "விவேகவாஹினி" யின் 9வது மலரை வெளியிட்டு வைத்தார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.


செப்டெம்பர் மாதம் 7ம் திகதி விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்பட்டது. காலையில் அர்ச்சனை, ஆரார்த்தி என்பனவும், மாலையில் விநாயகர் அகவல் பாராயணம், பஜனை என்பன இடம்பெற்றன. அன்றைய தினம் எமது சமய பாடசாலைக்கு தட்சிணேஸ்வரம் சாரதாமடத்தின் பொதுக்காரியதரிசியான ப்ரவ்ராஜிக அமலப்ராணா மாதாஜியும், சென்னை சாரதாமடத்தைச் சேர்ந்த ப்ரவ்ராஜிக சுசந்தப்ப்ராணா மாதாஜியும், ப்ரவ்ராஜிக ஆத்மதேவப்ப்ராணா மாதாஜியும் வருகை தந்திருந்தனர். இவர்கள் மாணவர்களுக்கு அறிவூட்டும் பல கதைகள் கூறினார்கள்.

ஒக்டொபர் மாதம் 4ம் திகதி முதல் 12ம் திகதி வரை நவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்பட்டது. அன்றைய தினத்தில் தினமும் காலையில் தேவீமஹாத்மியம் பாராயணம் பண்ணப்பட்டது. விஜய தசமி தினத்தன்று குழந்தைகளுக்கு ஏடு தொடக்கி வைக்கப்பட்டது

# கொழும்பு ராமகிருஷ்ண மிஷன் பூஜை அறை









# கொழும்பு ராமகிருஷ்ண மிஷன்
# வாசிக சாலை








# கொழும்பு ராமகிருஷ்ண மிஷன் வாசிக சாலை









## கொழும்பு ராமகிருஷ்ண மிஷன்
## சுவாமி விவேகானந்தர் மண்டபம்,
## வெளித்தோற்றம்








## கொழும்பு ராமகிருஷ்ண மிஷன்
## சுவாமி விவேகானந்தர் மண்டபம்,
## உட்தோற்றம்






## கொழும்பு ராமகிருஷ்ண மிஷன் விருந்தினர் இல்லம்







## கொழும்பு ராமகிருஷ்ண மிஷன் விருந்தினர் இல்லம்




## கொழும்பு ராமகிருஷ்ண மிஷன்
## ஆச்சிரமம்









சுபுத்தி, துஷ்டபுத்தி என்ற இரண்டு நண்பர்கள் பணம் ஈட்டுவதற்காக பயணம் போனார்கள். அப்போது வழியில் சுபுத்திக்கு பணப்புதையல் ஒன்று கிடைத்தது. அதை அவன் துஷ்டபுத்திக்கு கூறவே துஷ்டபுத்தியும் "இப்புதையலிலிருந்து கொஞ்சம் பணத்தை எடுத்துக் கொண்டு, மிகுதியை புதைத்துவிட்டுப் போவோம். வேண்டும்போது வந்து எடுத்துக்கொள்ளலாம்'' என்றான். சுபுத்தியும் இதற்கு சம்மதிக்கவே திட்டப்படியே இருவரும் செயற்பட்டு ஊருக்குச் சென்றனர்.


## தீயது நினைப்பின், தீமையே நடக்கும்!


மறுநாள் துஷ்டபுத்தி யாருக்கும் தெரியாமல் தனியாகச்சென்று, அப்புதையலை எடுத்துக்கொண்டு தன் வீட்டுக்கு வந்துவிட்டான்.


சிலநாட்கள் கழிந்தன. ஒருநாள் துஷ்டபுத்தி, சுபுத்தியிடம் "நாம் புதைத்துவைத்த புதையலைத்தேடி எடுத்துவரலாம் வா'' என அவனை அழைத்துச் சென்று புதைத்த இடத்தைத் தோண்டினான். அங்கே புதையல் இல்லாமையைக் கண்டு சுபுத்தி மிகவும் வருத்தமடைந்தான். ஆனால், துஷ்டபுத்தியோ ''புதையலை நீ திருடிவிட்டு இப்பொழுது ஒன்றும் தெரியாதவன் போல் நடிக்கிறாயா? உன் திருட்டுத்தனத்தை நீதிபதியிடம் முறையிடுவேன்'' என்று கபடமாக நடித்து நீதிபதியிடம் முறையிட்டான். வழக்கை விசாரித்த நீதிபதி துஷ்டபுத்தியிடம் ''நீ சொல்வதை உண்மை என்று நிரூபிக்க உன் சாட்சியை அழைத்து வா'' என்று கட்டளையிட்டார். சற்றுநேரம் யோசித்த துஷ்டபுத்தி தன் தந்தையை அழைத்து ''நான் காட்டும் மரத்தின் பொந்தில் நீங்கள் இருக்கவேண்டும். நீதிபதி அங்கே வந்து, புதையலை யார் எடுத்தது? என்று கேட்கும்பொழுது, 'சுபுத்தி' என்று சொல்லவேண்டும்'' என்று வற்புறுத்தினான். வலுகட்டாயமாக அவரை அழைத்துச் சென்று மரப்பொந்தில் இருத்தினான்.


சுபுத்தி அதைக்கேட்டு திகைப்பும் வியப்பும் அடைந்து, ''இதில் ஏதோ சதி இருக்கிறது. இங்கே ஒருவரும் இல்லாமல் இருக்கும்போது, குரல் மட்டும் எப்படி கேட்கிறது? அசரீரி எனில் உண்மையயல்லவா சொல்லியிருக்கவேண்டும்'' என்று யோசித்து, மரத்திற்கு தீ வைத்தான். மரம் தீப்பற்றி எரிய மரப்பொந்திலிருந்து துஷ்டபுத்தியின் தந்தை தீக்காயங்களுடன் வெளியே வந்து, நீதிபதியிடம் உண்மையைக் கூறினார். உண்மையை உணர்ந்த நீதிபதி துஷ்டபுத்தியைக் கடிந்து, தண்டனை விதித்தார்.

ஜோதி பந்த், இந்தியாவின் மஹாராஷ்ட்ராவை சேர்ந்த பக்திமான். சிறுவயது முதலே இவருக்கு ஏட்டுக்கல்வியில் ஆர்வம் இல்லாதிருந்த போதும், இறைபக்தி மிகுந்தவராக இருந்தார். கடவுளிடம் உண்மை நம்பிக்கை கொண்டால், அவர் நம்மைக் காப்பார் என்பதற்கு அவர் வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டு. அவர் வாழ்க்கையில் நடந்த ஓர் சம்பவத்தை இங்கே படக்கதையாகத் தருகிறோம்.





5
காலம் வரும்போது உன்னை என்னுடன் இணைத்துக்கொள்வேன். அதுவரை நீ வேண்டும்போதெல்லாம் உன்முன் தோன்றி உதவுவேன். உனக்கு பக்தியும், ஞானமும் இப்போது அருளுகிறேன்.
கோயிலில் நடந்ததை அறியாத ஜோதியின் அம்மா, புனே நகர அரண்மனை கணக்காளராக வேலை பார்க்கும் தனது தம்பியை அழைத்து,
6
தம்பி!, ஜோதியை உன்னுடன் அழைத்துச் சென்று வேண்டியவற்றை கற்பித்துக்கொடு.
அப்படியே செய்கிறேன் அக்கா!
மறுநாள், புனே நாட்டு அரசன், மகிபதியை அழைத்து,
7
மகிபதி! அரண்மனைக் கணக்குகளை இன்னும் மூன்று நாட்களுக்குள் எனக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
மகிபதி கவலையோடு இருந்தார். இதைக் கவனித்த ஜோதி, மாமாவின் கவலைக்கான காரணத்தை வினவே, மகிபதியும் விளக்கமாகக் கூறினார்.
8


9
ஜோதிக்கு விநாயகர் அளித்த வரம் நினைவுக்கு வந்தது. கவலையுடன் இருந்த தனது மாமாவிடம்,
மாமா கணக்கு புத்தகங்களை என்னிடம் தாருங்கள். அத்துடன் உணவு, உபகாரம் முதலிய பொருட்களையும் தாருங்கள். நான் மூன்று நாட்களுக்குள் கணக்கை முடித்துத் தருகிறேன்.
10
வழி தெரியாத மகிபதி ஜோதியிடம் ஒருவாறு புத்தகங்களை ஒப்படைத்தார். ஜோதி அறையினுள் சென்று விநாயகரை வழிபட ஆரம்பித்தான்.
11
விநாயகர் ஜோதியின் முன் தோன்றினார். ஜோதி வேண்டியதற்கு இணங்க கணக்குகள் முழுவதையும் செய்து கொடுத்தார்.
12
மறுநாள் காலை ஜோதியும், புத்தங்களை மாமாவிடம் ஒப்படைத்தான்.
நன்றி ஜோதி. எப்படித்தான் உன்னால் முடிந்ததோ!




பூனைக்குட்டி தன் பொறுப்பையெல்லாம் தாயிடம் ஒப்படைத்திருப்பது போல், நாமும் இறைவனிடம் பூரண சரணாகதி அடைந்தால் அவர் நம்மைக் காப்பார்.

– நம்பிக்கை! நம்பிக்கை! நம்மிடத்தில் நம்பிக்கை!
நம்பிக்கை! நம்பிக்கை! இறைவனிடத்தில் நம்பிக்கை! –
இதுவே நமது தாரக மந்திரம்

# இராமகிருஷ்ண குடும்பம்



## - ஹிருதயராம் முகோபாத்தியாயர் -

(சென்ற இதழின் தொடர்ச்சி)

*ஸ்ரீராமகிருஷ்ணரது சாதனைக் காலத்தில் அவருக்குத் தொண்டாற்றியவர் ஹிருதயராம். அவர், தனக்கும் இறைகாட்சி வேண்டிய போது 'காலம் உனக்கு வரும்' என்று கூறி அவரை அமைதிப்படுத்தினார் ராமகிருஷ்ணர். இனி.....*

ஹிருதயர் அப்போதைக்கு அமைதியாக இருந்தாலும் பின்னர் தனியாக முயன்று இறைக்காட்சிகளைப் பெறும் முயற்சியில் இறங்கினார். குருதேவர் பஞ்சவடியில் அமர்ந்து தியானம் செய்யும் இடத்தில் அமர்ந்து தியானத்தில் ஈடுபடலானார். அவ்வளவுதான், உடம்பெங்கும் பற்றி எரிவது போலாகியது. 'மாமா என்னைக் காப்பாற்றுங்கள்' என்று அலற ஆரம்பித்தார். நல்ல வேளை குருதேவர் அந்நேரம் பஞ்சவடிக்கு வந்ததால் விபரத்தை அறிந்து ஹிருதயரின் உடலை வருடிக்கொடுத்தார். பிறகு மிகுந்த பரிவுடன் 'ஏன் இப்படிச்செய்கிறாய்? எனக்குச் சேவை செய்வதன் மூலமே உனக்கு எல்லாம் கிடைக்கும் என்று நான் சொல்லியிருக்கிறேனே' என்றார். அதன்பின் ஹிருதயர் பஞ்சவடிக்குப் போய் தியானம் செய்யும் எண்ணத்தை விட்டார்.

ஒருமுறை ஹிருதயர் தம்வீட்டில் துர்க்கா பூஜையை பெரிதாகச் செய்ய விரும்பினார். அதற்கு குருதேவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினார். ஆனால் அதற்கு மதுர்பாபு தமது வீட்டில் நடைபெறும் துர்க்கா பூஜையில் குருதேவர் கலந்து கொள்வார் என்று கூறிவிட்டார். எனவே குருதேவர் ஹிருதயருக்கு ஆறுதல் அளிக்கும் விதமாக, 'வருத்தப்படாதே உனது பூஜையில் தினமும் எனது சூட்சும சரீரத்துடன் வந்து கலந்து கொள்வேன். தெரிந்த வகையில் பூஜையைச் செய், நான் சொல்லிய படி நடந்து கொண்டால் தேவி நிச்சயமாக உனது பூஜையை ஏற்றுக் கொள்வாள்' என்று கூறினார். ஹிருதயரும் அவ்வாறே மகிழ்ச்சியுடன் தம் வீட்டில் தேவியை வழிபட்டு வந்தார். அவர் ஒவ்வொரு நாளும் பூஜை வேளையில் ஸ்ரீராமகிருஷ்ணர் ஒளியுடன் தேவியின் சிலைக்கருகில் நின்று கொண்டிருப்பதைக் கண்டார். பின்னர் பூஜை முடித்து தட்சிணேஸ்வரம் சென்றபோது இது பற்றி குருதேவரிடம் கூறினார். குருதேவரும் அதை ஆமோதித்தார்.


இவ்வாறு ஹிருதயர் பல ஆன்மீகக் காட்சிகளைப் பெற்றிருந்தாலும் அடிப்படையில் அவர் சாதரண உலகியல் மனிதராக, பணம், புகழ் போன்றவற்றில் அதிக ஆர்வம் கொண்டவராக விளங்கினார்.

குருதேவரைப் பார்க்கவரும் பக்தர்களிடமும் பணம் வசூலிக்கத் தொடங்கினார். இது பற்றிக் குருதேவர் ஹிருதயருக்கு ஏசியபோதும், ஹிருதயர் தம்போக்கில் போய்க் கொண்டிருந்தார். குருதேவர் தம்மை முழுமையாக நம்பியிருக்கிறார் என்பது போன்ற தோற்றத்தை உருவாக்கிக் கொள்ளமுற்பட்டார். குருதேவரைக் கடுமையாக ஏசவோ அவரது முதுகுக்குப் பின்னால் நின்று அவரை ஏளனம் செய்யவோ அவர் தயங்கவில்லை. கர்வத்திற்குக் கண்டிப்பாக வீழ்ச்சி வந்தே தீரும். ஒருமுறை கோயிலில் நடைபெற்ற விழாவொன்றில் மதுர்பாபுவின் மகனான திரைலோக்கியர் குடும்பத்துடன் கலந்து கொண்டிருந்தார். ஒருநாள் அவருடைய எட்டு வயது மகளை ஹிருதயர் தேவியாக நினைத்து கால்களில் மலரிட்டு பூஜைசெய்தார். அக்காலத்தில், பிராமணர் ஒருவர் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த சிறுமியைப் பூஜித்தால் அவள் விரைவில் விதவையாகிடுவாள் என்றொரு நம்பிக்கை நிலவி வந்தது. இதனால் ஹிருதயரின் செயலால் கடும் கோபமடைந்த திரைலோக்கியர் அவரைக் கோயிலிலிருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டார். வேறு வழியின்றி ஹிருதயர் தட்சிணேஸ்வரத்தை விட்டு வெளியேறினார்.

பிற்காலத்தில் குருதேவர் இதுபற்றி பக்தர்களிடம், 'தேவிதான் அவனை இங்கிருந்து வெளியேற்றினாள். அவன் இங்கிருந்தால் பக்தர்களிடம் பணம் வசூலிப்பான். அதனால் நீங்களெல்லாம் வந்திருக்கமாட்டீர்கள்' என்று கூறினார். ஹிருதயர் தனது சொந்தக் கிராமத்திற்குச் சென்றார். அதன் பின்னர் ஓரிருமுறை அவர் குருதேவரை வந்து பார்த்துவிட்டுச் சென்றார். குருதேவரின் மறைவிற்குப் பின் அவரது வாழ்விலும் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. தமது ஜீவனத்திற்காக துணி விற்று பிழைப்பு நடாத்தினார். குருதேவரின் பிரிவு ஹிருதயருக்குச் சொல்லொணாத் துயரத்தை அளித்தது. அவரது மனம் எப்போதும் குருதேவருடன் வாழ்ந்த இனிய நாட்களையே எண்ணிக் கொண்டிருந்தது. ஸ்ரீராமகிருஷ்ணரின் துறவிச் சீடர்களையோ பக்தர்களையோ சந்திக்கும் போது ஸ்ரீராமகிருஷ்ணரின் ஆன்மீகச் சாதனைகள், தெய்வீக லீலைகள், குருதேவர் வாழ்க்கையில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகள் பற்றி சுவாரஷ்யமாகக் கூறுவார்.

1895 இல் ஸ்ரீராமகிருஷ்ணர் ஜெயந்தி விழா தட்சிணேஸ்வரத்தில் கொண்டாடப்பட்ட போது அதில் கலந்து கொண்ட ஹிருதயர் குருதேவரைப் பற்றிய பல சம்பவங்களை பக்தர்களிடையே பகிர்ந்து கொண்டார். வயதான காலத்தில் வீடுவீடாக அலைந்து திரிந்து துணி வியாபாரம் செய்ததாலும் இரவில் தாந்திரீக சாதனைகளைப் பழகியதாலும் அவரது உடல் ஆரோக்கியம் கெட்டது. 1899ம் ஆண்டு அவர் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

# என் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்திய மகான்



என் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்திய மகான் சுவாமி விவேகானந்தர் ஆவார். பாமரனைப் பண்புள்ளவனாக ஆக்குவது இந்து சமயமாகும். இந்து சமயத்தினுள் பெருமையைச் சேர்த்தவருள் இவரும் ஒருவர் என்பதில் ஐயமில்லை.

இவரது வாழ்க்கையில் நடந்த சுவாரஷ்யமான நிகழ்வுகள் பல உண்டு. அவற்றுள் என் மனதை உருக்கிய விடயம் இதுவாகும். "ஓர் ஊரில் மக்கள் விவேகானந்தரிடம் கூட்டம் கூட்டமாக வந்தார்கள். அவர் அவர்களிடம் தொடர்ந்து பேசிக்கொண்டே இருந்தார். சுவாமி விவேகானந்தர் வார்த்தைகளிலேயே இந்நிகழ்ச்சியைக் கேட்போம். 'நம்புவதற்கே கடினமாகத்தான் இருக்கும். ஆனால் மூன்று நாட்கள் இரவும் பகலும் எனக்கு ஒரு கணம் கூட ஓய்வே கிடைக்கவில்லை. தூக்கம், உணவு எதுவும் கிடையாது. யாரும் அதைப்பற்றிக் கவலைப்படவுமில்லை. அவர்கள் வந்து கொண்டே இருந்தார்கள். நானும் பேசிக்கொண்டே இருந்தேன். மூன்றாம் நாள் இரவு வந்தது. அனேகமாக எல்லோரும் போய்விட்டார்கள். அப்போது தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்த ஒருவன் என்னிடம் வந்தான். "சுவாமிகளே! மூன்று நாட்களாக உணவோ உறக்கமோ இல்லாமலே நீங்கள் பேசுவதை நான் பார்க்கிறேன். என் மனம் வேதனையில் துடிக்கிறது. பசியும் களைப்பும் உங்களுக்கும் இருக்கத்தானே செய்யும்! ஒரு டம்ளர் தண்ணீர் கூட நீங்கள் குடிக்கவில்லையே!" என்று பரிவுடன் கூறினான். அவனது அன்பு என்னை நெகிழச் செய்தது. "சாப்பிட ஏதாவது நீ தருவாயா? என்று அவனிடமே கேட்டேன். தர வேண்டுமென்று தான் என் இதயம் ஏங்குகிறது. ஆனால் என்ன செய்வேன்? நான் தாழ்ந்த ஜாதியைச்சேர்ந்தவன். நான் சப்பாத்தி செய்து உங்களுக்குத் தரமுடியாது. மாவும் மற்ற பொருட்களும் தருகிறேன் நீங்கள் செய்து சாப்பிடுங்கள்" என்றான் அவன். அதற்கு நான் "பரவாயில்லை நீயே செய்து எடுத்துக் கொண்டு வா. நான் சாப்பிடுகிறேன் என்றேன். அவன் நடுங்கிப் போனான். ஒரு துறவிக்கு உணவு அளித்தது தெரிந்தால் தண்டிக்கப்படுவான். ஏன் நாடு கடத்தவே செய்வார்கள். ஆனால் நான் அவனை ஆசுவாசப்படுத்தினேன். தண்டனை

- ரோஜனி (நுகேகொட தமிழ் மகா வித்தியாலம்)

கிடைக்காமல் நான் பார்த்துக் கொள்கிறேன்.'' என்று உறுதியளித்தேன். அவன் எனது உறுதியை அவ்வளவாக நம்பவில்லை. இருந்தாலும் என் மீதுள்ள அன்பு காரணமாக சப்பாத்தி கொண்டு வந்தான். நானும் சாப்பிட்டேன். தேவர் தலைவனான இந்திரன் ஒரு தங்கக் குவளையில் தேவாமிர்தத்தைத் தந்திருந்தால் அது கூட இவ்வளவு சுவையாக இருந்திருக்காது என்றே எனக்குத் தோன்றியது. என் நெஞ்சம் அன்பாலும் நன்றியாலும் நிறைந்தது. கண்கள் கண்ணீரைப் பொழிந்தன.



இதற்கிடையில் விவேகானந்தர் ஒரு தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்தவனிடமிருந்து உண்பதைக் கண்ட சில உயர் ஜாதியினர் ஆத்திரமடைந்தனர். விவேகானந்தரிடமே சென்று இதனைத் தெரிவித்தனர். அவர் கூறியதைப் பொறுமையாகக் கேட்டார் விவேகானந்தர். பிறகு "நீங்கள் என்னைத் தொடர்ந்து மூன்று நாட்கள் பேச வைத்தீர்கள். இடையில் நான் சாப்பிட்டேனா ஓய்வெடுத்தேனா என்று ஒருமுறை கூடக் கவலைப் படவில்லை. நீங்கள் பெரியமனிதர்கள் உயர்ந்த ஜாதியினர்! ஆனால் இங்கே பாருங்கள் தனக்குத் தண்டனை கிடைக்குமே என்று தெரிந்தும் மனித நேயம் என்ற ஒன்றின் காரணமாக எனக்கு உணவு தந்தான் இவன். இவனைத்தாழ்ந்த ஜாதியினன் என்று ஒதுக்குகிறீர்கள். இது உங்களுக்கே வெட்கமாக இல்லையா?'' என அவர்களைத் திட்டி அவர்களது அறியாமையைத் தெளிவு படுத்தினார்.

> "எழுமின் !
> விழிமின் !
> கருதிய காரியம்
> கைகூடும் வரை
> அயராது உழைமின்''

இச்சம்பவத்தில் சுவாமி விவேகானந்தர் சாதி மதம் பார்க்காது எல்லா மக்களும் ஓரினத்தவர்களாகக் கருதப்பட வேண்டும் என்ற அடிப்படையில் செயற்பட்டமை என் மனதை உருக்கியுள்ளது. இவரது பண்புகளையும் பெருமைகளையும் கூறியுள்ளவர்கள் பலராவர். அவர்களுள் சுப்பிரமணியபாரதியார், சுப்பிரமணியசிவம், ராஜாஜி, ரவீந்திரநாத், அரவிந்தர், சுபாஷ்சந்திரபோஸ், காந்தி, ஜவகர்லால் நேரு போன்றோரைக் கூறலாம்.

ஆகவே இவர்களது பண்புகளையும் ஒழுக்கங்களையும் நம் வாழ்வில் கடைப்பிடித்து நற்பண்புகளுடைய ஒழுக்க சீலர்களாக என்றும் வாழ வேண்டும் என உறுதி பூண வேண்டும்.


# அவதாரவரிஷ்டர் - ஸ்ரீராமகிருஷ்ணர்



ஸ்ரீராமகிருஷ்ணரை "அவதார வரிஷ்டர்", அதாவது அவதாரங்களில் தலைசிறந்தவர் என்று குறிப்பிடுகிறார் சுவாமி விவேகானந்தர். இதை விளக்குவது போலவே தனது சகோதரத் துறவியாகிய சுவாமி சிவானந்தருக்கு அவர் எழுதிய கடிதமொன்றில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். *"சகோதரா! முதலில் ராமகிருஷ்ண பரமஹம்சரைப் புரிந்து கொள்ளாமல் வேதம், வேதாந்தம், புராணங்கள் எதையும் புரிந்து கொள்ள முடியாது. இந்தியாவின் மதச் சிந்தனைத் தொகுப்பின் மீது பேராற்றல் வாய்ந்த ஒரு பேரொளியை வீசி விளங்கச் செய்வதாக அமைந்துள்ளது அவரது வாழ்க்கை. வேதங்களுக்கும் அவற்றின் குறிக்கோளுக்கும் வாழும் விளக்கவுரையாகத் திகழ்ந்தார் அவர். இந்தியாவின் தேசிய மதவாழ்வு முழுவதையும் தம் ஒரு பிறவியிலேயே முழுமையாக அவர் வாழ்ந்துவிட்டார். ஞானம், அன்பு, வைராக்கியம் உலகிற்கு நன்மை செய்ய ஆவல், தாராள குணம் இவற்றின் மொத்த வடிவம் அவர். வேறு யாரை அவருடன் ஒப்பிட முடியும்? அவரைப் புரிந்து கொள்ள முடியாதவனது பிறவி வீணே. ஸ்ரீராமகிருஷ்ணர் தனது வாழ்நாளிலேயே, இந்தப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலேயே பல்கலைக்கழக மேதைகளாலும், அறிஞர்களாலும் இறைவன் என்று வணங்கப்பட்டார்"* (ஞானதீபம்-1 ப-463,464)

நவீன விஞ்ஞானம், நாகரீகத்திலும் பண்பாட்டிலும் மனிதன் கூர்ப்படைந்து வருவதாகக் கூறுகிறது. புராணங்களில் கூறப்பட்டுள்ள இறைவனது அவதாரங்களைச் சற்றே ஒப்பு நோக்குவோமாயின் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். அதாவது மனிதப் பண்பாடும் நாகரீகமும்

பரிணாம வளர்ச்சிக்குட்படுவதைப் போலவே மனிதவடிவில் அவதரிக்கும் இறைவனது அவதாரங்களிலும் ஒரு வளர்ச்சியை அவதானிக்கலாம். இறைவனது ஒவ்வொரு அவதாரத்தின் அடிப்படை நோக்கமும் 'தர்மத்தை ஸ்தாபனம் செய்தல்' என்பதாக இருந்தாலும் ஒவ்வொரு முறையும் இறைவன் எடுக்கும் வடிவத்திலும் அவர் தனது அவதாரப் பணியைச் செய்யும் விதத்திலும் இவ்வளர்ச்சியை அவதானிக்கலாம். ஆரம்ப காலத்தில் நாகரீகமும், பண்பட்ட உள்ளமும் அற்ற அசுரர்களை அழிக்கும் பொருட்டு இறைவன் ஆமையாகவும், பன்றியாகவும் அவதரித்தார். பின்னர் சற்று வளர்ச்சி ஏற்பட்ட காலத்தில் தோன்றிய ஹிரண்யகசிபுவை வதைத்தற் பொருட்டு அரைவாசி மிருகமும் அரைவாசி மனிதனுமாக நரசிம்ம வடிவைத் தாங்கினார். அதன் பின்பு மஹாபலியைச் சம்ஹாரம் செய்தற் பொருட்டு மனித உருவும் ஆனால் கட்டை வடிவமும் கொண்ட வாமன அவதாரத்தை எடுத்தார். பின்னர் ஏற்பட்ட ராமாவதாரத்திலும் கிருஷ்ணாவதாரத்திலும் முழுமையான மனிதவுருவைத் தாங்கிக் கொண்டார். தன்னைச் சரணடைந்த விபீஷணன் போன்றோரைக் காத்தார். ஆனாலும் தீயவர்களை அழிக்கவே செய்தார். பிரம்மாஸ்திரம் போன்ற கொடிய ஆயுதங்களையும் பயன்படுத்தவே செய்தார். பின்னர் ஏற்பட்ட புத்தாவதாரத்தில் யாரையும் அழிக்கவேயில்லை. கொடிய ஆயுதங்கள் எதையும் கையில் வைத்திருக்கவேயில்லை. ஆனாலும் புரோகிதத்துவத்தையும் சடங்காசாரங்களையும் கடுமையாக விமர்சிக்கவே செய்தார். இறுதியாக ஏற்பட்டது தான் ராமகிருஷ்ண அவதாரம் இங்கே யாரும் அழிக்கப்படவில்லை. எந்தவிதமான பயங்கர ஆயுதங்களும் பயன்படுத்தப்படவுமில்லை. யாருமே கண்டிக்கப்படவோ விமர்சிக்கப்படவோ கூட இல்லை. "அனைத்து வழிகளும் இறைவனை அடைவதற்கான பாதைகளே" என்று அமுத மொழி பகர்ந்து அனைவரையும் தனது அன்பினால் அரவணைத்துக் கொண்டார் ஸ்ரீராமகிருஷ்ணராக வந்த இறைவன்.



*ராமகிருஷ்ண மிஷன் சமயபாடசாலைக்கு வரும் மாணவர்களின் கருத்துக்கள்.*

*சமய பாடசாலைக்கு வருவதனால் . . .*

| | |
|---|---|
| தீய எண்ணங்கள் மனதில் வரும்போது என்னை கட்டுப்படுத்தப் பழகிக் கொண்டேன். - க.சிவகுமார் (12) | ஏனையோரின் கஷ்டங்களை புரிந்து அவர்களுக்கு உதவப் பழகிக் - கொண்டேன். - க. அபிராம் (12) |

இது கதையல்ல ! கட்டுரை அல்ல! திணிக்கப்படும் அறிவுரைகளும் அல்ல! இங்கு கூறப்படும் விடயங்கள் பற்றிச் சற்றுச் சிந்தியுங்கள்.


# அன்பார்ந்த பெற்றோர்களே!

## பெற்றோர் என்பவர் யார் ?

பிள்ளைகளைப் பெற்றவர்கள் பெற்றோர் எனவும், பேறு பெற்றோர் எனவும் விளக்கம் கூறலாம்.

*குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள்*
*மழலைச் சொற் கேளாதவர்*

என்பது குறள்.



ஆகவே, பெற்றோராகிய நீங்கள் இப்பெரிய பேறினைப் பெற்றவர்கள் அல்லவா? சிந்தியுங்கள்!

பிள்ளையைப் பெற்று விட்டால் போதுமா? பேணி வளர்க்க வேண்டும் தெரியுமா?

என்கிறார் ஒரு கவிஞர். எத்தனை உண்மை. பெற்றோர்களாகிய ஒவ்வொருவரும் ஆழமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய விடயம். சிந்திப்பது மட்டுமல்ல, தம்மைத் தாமே சுயமதிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

## பிள்ளை என்பவன் யார்?

முதிர்ந்த ஒரு மனிதனின் சிறு உருவம் அல்ல. பிள்ளை நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ச்சியடைகின்றது. அத்துடன் அவனிடத்தே விருத்தியும் ஏற்படுகின்றது. இத்தகைய வளர்ச்சி, விருத்தி ஆகிய இரண்டும் சீராக இயங்க வேண்டும். அவ்வாறு சீராக இயங்கும் பட்சத்திலேயே ஒருவனிடத்தில் ஆளுமை விருத்தி ஏற்படுகின்றது.

## ஆளுமை என்றால் என்ன?

ஆளுமை என்பது ஒருவனது குண இயல்புகளின் கூட்டுச் சேர்க்கையாகும். அவையாவன: உடல் விருத்தி, அறிவாற்றல் விருத்தி, சமூக விருத்தி, மனவெழுச்சி விருத்தி, அழகியல் விருத்தி, ஆன்மிக விருத்தி ஆகியனவாகும்.

ஆளுமையான சிந்தனை, உணர்வு, செயல் ஆகிய மூன்று கூறுகளை உள்ளடக்குகிறது. மூன்று கூறுகளும் ஒனறுடனொன்று தொடர்பு பட்டு, இணைந்து இடைத்தாக்க மடைகின்றபோது, ஒருவரிடத்தே ஆளுமை விருத்தி ஏற்படுகின்றது. சிறந்த சிந்தனைகள் விருத்தியுறும்போது, சிறந்த உணர்வுகள் உள்ளத்தில் துாண்டப்பட்டு, சிறந்த செயல்கள் வெளிக்காட்டுப்படுகின்றன. தூய சிந்தனைக்கு மிக முக்கியமாக விளங்குவது மனவெழுச்சித்தளம்பலற்ற சீரான உள நிலையே!

‘சுகாதாரம் என்பது நோயற்ற நிலை மட்டுமல்ல, உடல், உள, சமூக, ஆன்மீகம் ஆகியவை சார்ந்த உன்னத நிலை’ என உலக சுகாதார நிறுவனம் கூறுகின்றது.

‘உள்ளம் ஆரோக்கியமாக இயங்கும் பட்சத்தில், ஒருவர் தனது வாழ்வைப் பூரணமாக அனுபவிப்பதோடு முழுமையாகவும் இயக்குவான்’ என்கிறார் கார்ல் றோஜஸ் என்ற உளவியலாளர்.

உள ஆரோக்கியம் மிகவும் முக்கியமென்பதனை மேற்கூறிய கூற்றுக்களிலிருந்து நன்கு விளங்கிக் கொள்ளலாம். ஒருவரிடம் ஆரோக்கியமற்ற உளநிலை காணப்படும்போது பின்வரும் வெளிப்பாடுகளை அவதானிக்க முடியும்.

- § பாதுகாப்பின்மை
- § மகிழ்ச்சியின்மை
- § சுதந்திரமின்மை
- § பொருத்தப்பாடின்மை
- § ஒழுங்கின்மை
- § ஒழுக்கமின்மை
- § நாட்டமின்மை
- § மனவெழுச்சிச் சீரின்மை
- § பதகளிப்பு நிலை ஏற்படல்
- § தாழ்வுச் சிக்கல் உருவாதல்
- § உடல் எதிர்ப்புச் சக்தி குறைதல்



ஆரோக்கியமற்ற உளநிலையை உருவாக்கும் காரணிகள் தாவரங்களைத் தாக்கும் பீடைகள் போன்றவை. இவை முளையிலேயே கிள்ளியெறியப்படல் வேண்டும்.

உளநிலைச் சீராக்கத்தில், பாடசாலைகளும் மற்றும் அறநெறிப் பாடசாலைகளும் பாரிய பங்களிப்பினை ஆற்றி வருகின்றன. இவை, மாணவர்களது அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியங்கள், தனியாள் இடைத்தொடர்பு போன்றவற்றில் விருத்தியை ஏற்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. விஷேடமாக, அறநெறிப்பாடசாலைகள் உள ஆரோக்கியத்தில் அளப்பரிய சேவைகளை ஆற்றி வருகின்றன.

## அறநெறிப்பாடசாலைகள் ஆற்றுவது என்ன?

- சமய அறிவைப் போதிக்கின்றன.
- சமய பற்றுள்ளவராக ஆக்குகின்றன.
- ஒழுக்க சீலர்களை உருவாக்குவதற்கான வழிகாட்டலை வழங்குகின்றன.
- தூய வாழ்வை மேற்கொள்வதற்கான வழிவகைகளை வழங்குகின்றன.
- ஏனைய சமயத்தவரை மதிக்கின்ற பண்பினை விருத்தி செய்கின்றன.
- சிறந்த நற்பிரஜைகளை உருவாக்க முயலுகின்றன.
- உடல், உள ஆரோக்கியம் பேணுவதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

சுருங்கக் கூறின், பிள்ளைகளது உடல், உள்ளம் ஆகியன சீரான முறையில் இயங்குவதற்கான சகல முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றன என்பது கண்கூடு.

அப்படியாயின், பெற்றோராகிய உங்களது பணி யாது? எவ்வளவுதான் பாடசாலைகளும் அறநெறிப் பாடசாலைகளும் பிள்ளைகளை நெறிப்படுத்தினாலும் பெற்றோராகிய நீங்கள், உங்கள் பிள்ளைகளின் பண்புசார் விருத்தியில் அதிக கவனம் செலுத்த வேண்டியது மிக அவசியமாகின்றது. பிள்ளையின் கல்வி விருத்தியில் ஆசிரியர், பெற்றோர் ஆகிய இரு சாராரும் இணைந்து புரிந்துணர்வோடும், பொறுப்புணர்ச்சியுடனும், அர்ப்பணிப்புடனும் செயலாற்றும்போது பிள்ளைகளின் உள ஆரோக்கியத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தமுடியும்.

⌘ பிள்ளைகளின் உடற்தேவைகள் (உணவு, நீர், ஓய்வு, நித்திரை) மற்றும் உளத்தேவைகளான பாதுகாப்பு, அன்பு, கணிப்பு, சுய திறன்கள் ஆகியவற்றை வெளிக்கொணர்வதற்கான ஊக்குவிப்பு போன்றவற்றில் கவனம் செலுத்துதல்.



⌘ பிள்ளைகளின் நடத்தைக் கோலங்களை உன்னிப்பாக அவதானித்து வழிப்படுத்தல்

⌘ ஆற்றிய சேவைகளுக்கு பாராட்டு வழங்குதல்

⌘ குடும்ப சமய ஆராதனைகளில் பங்குபெறச் செய்தல். இதனால் புரிந்துணர்வு, ஒற்றுமை போன்ற பண்புகள் விருத்தியுறுவதற்கான வாய்ப்புகள் அதிகமுண்டு

⌘ சமய ஸ்தலங்களுக்கு குடும்ப சமேதராய் செல்லல்.

⌘ நற்பண்புகளை விளக்கும் கதைகளைக் கூறுதல்

⌘ அறநெறிப்பாடசாலைகளுக்குச் செல்ல ஊக்குவிப்பு வழங்குவது மட்டுமல்லாமல் அங்கு கற்றவிடயங்கள் பற்றிக் கலந்துரையாடல். தேவையேற்படும் பட்சத்தில் சில விழுமியப் பண்புகளை வலியுறுத்திக் கூறுதல்.

⌘ மாத்திற்கு ஒருமுறையாவது ஆசிரியர்களைச் சந்தித்து தமது பிள்ளைகளின் முன்னேற்றம் பற்றிக் கலந்துரையாடல்.

⌘ சமய விழாக்களில் பங்குபற்ற ஊக்குவித்தல்.

⌘ தனியாள் வேறுபாடுகளையும், பால் வேறுபாடுகளையும் (ஆண், பெண்) அறிந்து அவரவர் வயதின் முதிர்ச்சிக்கேற்ற ஆலோசனையையும் வழிகாட்டலையும் வழங்குதல்.

⌘ எந்நேரமும் விழிப்புணர்வோடு இருத்தல். ஏனெனில் கவனிப்பும், பாதுகாப்பும் வழங்குவது பெற்றோரும் பாரிய பொறுப்பாகும்.

⌘ இவை அனைத்திற்கும் மேலாகப் பெற்றோர் சிறந்த உதாரண புருஷர்களாக, தமது பிள்ளைகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக வாழவேண்டியது மிக அவசியம். ஏனெனில் அவதானிப்புமுறை மூலம் கற்றல் நடைபெறுவதால் சிறந்த அல்லது சிறப்பற்ற பண்புகளை பிள்ளைகள் பின்பற்றுகின்றனர்.

சுருங்கக் கூறின் சொல்லில், செயலில், உடையில், நடையில் பிள்ளைகளுக்கும் ஏனையோருக்கும் முன்மாதிரியாக இருக்க வேண்டியவர்கள் பெற்றோர்களே!


பிள்ளைகள் பூரண மனிதர்களாக வளர வகை செய்வோம்.

திவ்யராணி சிதம்பரநாதன்.

*சமய பாடசாலைக்கு வருவதனால் . . .*

இங்கு எந்த செயலைச் செய்யும்போதும் ஒரு ஒழுங்கு பின்பற்றப்படுவதால், அதை எனது ஏனைய நாளாந்த வாழ்க்கையில் பின்பற்றமுடிகிறது. - ஆரணி. ம (12)


## 'அறநெறி அமுதம்' - மதிப்புரைகள்
## கடந்த மலர்களை மலரச்செய்தோரிடமிருந்து....




*பகவான் ஸ்ரீராமக்ருஷ்ணரின் அவதார நோக்கம் மனிதனை கடவுளிடம் எடுத்துச்செல்வதே. எவ்வளவுதான் விஞ்ஞான முன்னேற்றம் பலவழிகளில் உலகில் ஏற்பட்டாலும் மனிதனுக்கு இன்றியமையாமை இறைவனின் கிருபை. "தீபமானது எண்ணெய் இல்லாமல் எரியாது. இதனைப்போல் கடவுள் இணக்கம் இல்லாமல் மனிதன் என்றும் வாழமுடியாது" இளையதலைமுறையினருக்கு ஆத்மவித்தையைப் போதிக்கும் இவ் அறநெறி அமுதம் மென்மேலும் பலரைச் சென்றடைய குருதேவரின் திருவடிகளில் இறைஞ்சி மனதாரப்பிரார்த்திக்கின்றேன்.*

- அன்னையின் அடியவர் சுவாமி சித்ரூபானந்தா

*'அறநெறி அமுதம்' என்னும் இந்நூல் மாணவர்களின் திறமைகளை வெளிக் கொணர்வதில் முன்நிற்கிறது. இந்நூலில் உள்ள ஆக்கங்களை மாணவர்களே எழுதி நூல் வடிவமாக்கி வெளியிடுவது இராமக்ருஷ்ண மிஷனின் ஒரு புதிய கல்விச் சீர்திருத்தமாகும்....*




- திருமதி. கையிலைநாதன (அதிபர், கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி)



*யோகாசனம், சமய சார்பான சித்திரக்கதைகள், குறுக்கெழுத்துப்போட்டி செய்திக்குறிப்புகள், மந்திரங்கள், சிந்தனையைத் தூண்டும் அட்டைப்படங்களுடன் அவற்றுக்கான விளக்கத்துடன் கவர்ச்சியானதாகவும், எளிமையாகவும் இச்சிறிய இதழை வெளியிட்டு, மாணவர்கள் பன்முக அறிவைப் பெற உதவுகின்றனர். இறுதி அட்டையின் பின்புறத்தில் வரும் உங்கள் சிந்தனைக்கு என்ற அம்சம் இதழை வாசித்து முடிக்கும் போது ஒரு மறக்கமுடியாத எண்ணக்கருவைத் தூண்டி விடுகிறது....*


- திருமதி. ரூபவதி சிவகுருநாதன் (முன்னாள் அதிபர், கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி)

*மாணவர்களை அறநெறியில் இட்டுச் செல்லும் அறநெறி அமுதம். . . அந்த அறநெறி அமுதத்தைப் பருகிய போது, அச்சிறார்களின் ஆத்மீக அறிவைக் கண்டு ஆனந்தப்படுகிறேன். இம் மலரை மலர வைக்கும் ஆசிரியர்களுக்கும்*




ஆக்கங்களைக் கொடுக்கும் மாணவர்களுக்கும் இந்தக் கல்லூரியின் முதல்வர் என்ற வகையிலே எம்மாலான உதவிகளையும் ஊக்கத்தையும் தருவேன் என இவ்வேளையிலே கூறுகின்றேன். இம் மலர் என்றும் புத்துப் பயன் தர இறைவனதும் சுவாமிகளினதும் ஆசிகள் என்றும் உண்டு...

- ந.மன்மதராஜன் (அதிபர், கொ/இந்து கல்லூரி, இரத்மலானை)



இன்றைய உலகின் நற்பிரஜையாக, நாளைய உலகின் முழுமனிதனாக வாழ வளம் பெற, ஒளியேற்றுவிப்பது இந்த 'அறநெறி அமுதம்' எனும் பொங்கலே. இப்பணி மேன்மேலும் தொடர சகல ஒத்துழைப்பையும் ஒவ்வொருவரும் நல்க வேண்டும் என இறைவனை வேண்டுகிறேன்...

- திருமதி. மல்லிகா தவராசா (ஆசிரியர், சாந்த கிளையர் கல்லூரி)



மக்களுக்கு வழிகாட்டாத, மக்கள் சிந்தனையை உயர்த்திவிடாத, சமூக முன்னேற்றத்திற்கு வித்திடாத எந்த எழுத்தும் நிலைத்து நிற்பதில்லை. மாறாக சீரிய கருத்துடைய எழுத்துக்கள் காலம் கடந்தும் நிலைத்து நிற்பவை. அந்த வகையில் 'அறநெறி அமுதம்' சிறார்க்கும், பெரியார்க்கும், சகலருக்கும் அமுதம் போன்றது. இது நிலைத்து நிற்கும், நீடித்துத் தொடரும் என்பது திண்ணம்...

- திரு. வே.சண்முகராஜா (அதிபர், நுகேகொடை தமிழ் மகா வித்தியாலயம்)



ஸ்ரீராமகிருஷ்ணரின் கருத்துக்களை, சுவாமிஜியின் கர்ச்சனையை, தாய அன்னை சாரதாதேவியாரின் அன்பு மொழிகளை, ஆன்மீகப் பெரியோர்களின் அறிவுரைகளை, சமயங்களின் தத்துவ விளக்கங்களை இளம் சமுதாயம் ஓதியுணர்ந்து அதன் வழியொழுக வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு இராமகிருஷ்ண மிஷன் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் சுவாமிகளதும், ஆசிரியர்களதும் வழிகாட்டலுடன் 'அறநெறி அமுதம்' என்ற காலாண்டிதழை வெளியிடுவது காலத்திற்கேற்ற, உயர்ந்த, பாராட்டப் பட வேண்டிய, சிறந்த ஒரு பணி...

- செல்வி. கணபதிப்பிள்ளை (செயலாளர், ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சமித்தி)

இந்த சஞ்சிகை ஐந்து வருடங்களாக தொடர்ந்து வெளிவருவது ஒரு சாதனைதான். இராமகிருஷ்ணமிஷின் அறநெறிப் பாடசாலையில் படிக்கும் மாணவர்கள் உண்மையிலேயே தவம் செய்தவர்கள்தான். மிஷின் சுவாமிகளின் வழிகாட்டலில் தங்கள் வாழ்க்கையை செம்மையாக நடத்துவார்கள் என்பதில் ஐயமில்லை. இச்சஞ்சிகை தொடர்ந்து பல்லாண்டுகள் வெளிவரவேண்மென்று எம்பெருமானை வேண்டுகிறோம்....

- எந்திரி. வே. இரகுநாதன் (முன்னாள் இந்து கலாசார அமைச்சுச் செயலாளர்)

இவ் அறநெறியினை ஊட்டும் அமுது என்றும் படைக்கப்படல் வேண்டும், இதனைச் சுவைத்து அனைவரும் பயன்பெற வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்....

- திரு.தி. கணேசராசா (அதிபர், கொ/விபுலானந்த தமிழ் மகா வித்தியாலயம்)

'அறநெறி அமுதம்' சிறந்த முறையில் வளர்ச்சி பெற்று இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் உள்ள அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குரிய இதழாகத் திகழ என் நல்வாழ்த்துக்கள்....

- சாந்தி நாவுக்கரசன் (பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்)

எத்தனையோ பாடநூல்களால் வழங்கமுடியாத ஒரு ஆத்மீக அனுபவத்தையும் உள்ளடக்கியுள்ள 'அறநெறி அமுதம்' மாணவணர்களுக்கு மட்டுமன்றி எம்போன்ற வளர்ந்தவர்களுக்கும் கூட ஒரு ஆத்மீக வழிகாட்டி. வாழ்க்கை வழிகாட்டி என்பதே எமது துணிபு...

- திரு. சோ. சுந்திரசேகரன் (பேராசிரியர், கொழும்பு பல்கழைக்கழகம்)

தமிழ், ஆன்மீகம், அறிவுவளர்ச்சி, ஞானம் என்பவற்றை நல்கும் இச்சஞ்சிகையானது மலிவு விலையில், மக்கள் மனதில் மாண்புகளை வளர்த்து, மாநிலத்தில் மானிடனாக வாழ வழிவகுக்கிறது...

- திருமதி. கஜேந்திரதாஸ் (அதிபர், கொ/இந்து மகளிர் கல்லூரி)

# குறுக்கெழுத்துப் போட்டி - இல 12

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 | 4 |
| | | X | X | 5 | |
| 6 | | 7 | 8 | X | |
| 9 | | | | | |
| | X | 10 | | | |
| X | 11 | | | X | |

*இடமிருந்து வலம்*

1. சமய குரவர் நால்வருள் ஒருவர்.
5. "அஞ்சாமல் ------- வழியே போகவேண்டாம்" (வலமிருந்து இடம்)
6. அனுமாரை இனங்காண சீதைக்கு உதவியது.
9. இதிகாசங்களுள் ஒன்று. (குழம்பியுள்ளது)
10. மழைக்கு அதிபதி.
11. உயிர். (குழம்பியுள்ளது)

*மேலிருந்து கீழ்*

1. அறுவகைச் சமயங்களோடு தொடர்புடையவர்.
2. திருமால் திருப்பாற்கடலில் ----- ல் பள்ளி கொள்கின்றார். (குழம்பியுள்ளது)
3. இவரிடம் கதாதரர் முதலில் மடிப்பிச்சை ஏற்றார்.
4. சிவனால் உதைபட்டவர். (குழம்பியுள்ளது)
7. குழலிசையால் ஆயர்களைக் கவர்ந்தவர்.
8. இங்கே பிரமன் சிவபூஜைசெய்து பேறுபெற்றர். (தலைகீழ்)

விடைகளுக்கான இறுதித் திகதி :
**30 - 11 - 2005**
அனுப்ப வேண்டிய முகவரி:
'அறநெறி அமுதம்'
ராமகிருக்ஷ்ண மிஷன்
40, ராமகிருக்ஷ்ண வீதி,
கொழும்பு-06.

---

சென்ற இதழின் போட்டி முடிவுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆ 1 | ல | ய 2 | ம் 3 | X | X |
| ன் | X | ஆ 4 | கா | ய 5 | ம் |
| மா 6 | ம் 7 | ண் | ய | க் | ரூ |
| X | ஓ 8 | ம் | X | ஞ | X |
| க் 9 | வி | ர | கி 10 | ம் | க 11 |
| ரி 12 | ய | X | ளி | X | தி |

*பரிசு பெறுபவர்*
விசாகசரன்
தரம் - 8
றோயல் கல்லூரி




சுட்டிப்பையன் ஆபிரகாம் அன்றும் வழமைபோல், தந்தை வேலை செய்து கொண்டிருக்கும் பொழுது இடைவிடாது கேள்வி கேட்டுக் கொண்டிருந்தான். புத்திசாலியான பையனை மெய்ச்சியபடியே விடை கூறிக் கொண்டிருந்த தந்தையும், பையனின் கவனத்தை திசை திருப்பி தனது வேலையை இடையூறு இல்லாமல் தொடர்வதற்காக, உலகப்பட புதிர் ஒன்றை கொடுத்து "மகனே! இந்த படத்தில் உள்ள உலகம் சிதறிக் கிடக்கிறது. இந்த சிறிய சிறிய துண்டுகளை ஒன்று சேர்த்து உன்னால் சீராக்க முடியுமா?'' என்று கேட்டார். பையன் ஆமோதித்து அதனை பெற்றுக் கொண்டான். 'எப்படியும் இதனை செய்து முடிக்க சில மணிநேரமாகும். அதற்குள் என் வேலையை முடித்துவிடலாம்' என்று நினைத்துக் கொண்டே மிகுதி வேலையில் மூழ்கினார்.

என்ன ஆச்சரியம்! சில நிமிடங்களில் புதிரை செய்து முடித்துவிட்டான் பையன். ஆச்சரியப்பட்ட தந்தை "மகனே! எப்படி உன்னால் இவ்வளவு விரைவாக முடிந்தது'' என்று கேட்டார். மகனும் "அப்பா! நீங்கள் தந்த துண்டுகளை பின் பக்கம் திருப்பிப் பார்த்தேன். அதில் மனித உருவம் சிதறி இருப்பதைக் கண்டேன். எனக்கு தெரியாத உலகத்தை சீராக்குவதை விட்டு, நான் அறிந்த மனிதனை சீராக்கினேன். உலகம் தானே சீராகிவிட்டது''





அன்பளிப்பு ரூபா 10/=